www.eelamview.com


# விடுதலைப்புலிகள்

குரல் - 45 · தை - 1994 · அன்பளிப்பு: ரூபா 5/-


# பெருமெடுப்பிலான படையெடுப்புக்கு சிங்கள அரசு தயாராகின்றது

## ஒரே சமயத்தில் - பல முனைகளூடு - வடதமிழீழம் மீது தாக்குதல்?

**பூ**நகரித் தோல்வியும் சிங்கள தேசத்தில் புதைகுழிகள் கண்டறியப்படும் செய்திகளும் சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள அரசுக்கெதிரான வெறுப்புணர்வுகளையும் - கோபாவேசங்களையும் - திசைதிருப்பும் நோக்குடன், தமிழர்கள்மீது ஒரு பெரும் படையெடுப்பை நடாத்தச் சிங்கள அரசு திட்டமிடுகிறது.

'தவளை' இராணுவ நடவடிக்கைமூலம் புலிகள் பெற்றுவிட்ட இராணுவ மேல் நிலையைத் தம்வசப்படுத்த, சிங்களத் தரைப்படையின் புதிய தளபதி திடசங்கற்பம் பூண்டுள்ளார். அவ்விதமானதொரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க, சிறீலங்கா ஜனாதிபதியும் ஆவலாக உள்ளார்.

எனவே, பிறந்துள்ள இப் புதுவருடத்தை ஒரு போராண்டாகவே சிங்கள அரசு கழிக்க இருககிறது.

புதிய போராண்டில் பெரும்பலத்துடன் போரை நடாத்துவதற்கு ஏற்றவிதத்தில், ஒரு போர்முறைத் திட்டம் (Strategy) வரையப்பட்டு விட்டதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்கா கூறியுள்ளார். அத்திட்டம் எத்தகையது என்று அவர் கூறாவிட்டாலும், அது வெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


வட தமிழீழத்தில் - ஒரே சமயத்தில் பல முனைகளூடாக - படையெடுப்பை நடாத்தி நிலங்களை ஆக்கிரமிப்பதுதான், சிங்களப் படைத்துறையின் புதிய திட்டமாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. அதேவேளை, தென் தமிழீழத்தில் தனது இராணுவப் பிடியை மேலும் இறுக்கும் நோக்குடன், தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவி, அப்பிராந்தியத்தை விரைவாக சிங்களமயப்படுத்த முயற்சிக்கும் என்றும் நம்பலாம்.

ஆனாலும், சிங்களப் படைத்துறையின புதிய போர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த, அதற்கு மேலதிக ஆட்பலம் தேவைப்படுகின்றது. இப்படியான ஒரு போர்முறைத் திட்டத்திற்காகவே, கடந்த வருடம் ஒன்பது பட்டாலியன்களுக்கு (ஏறக்குறைய 9000 பேர்) தேவையான அளவு ஆட்கள் படையில் சேர்க்கப்பட்டு பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளதாக, பதவி விலகிய முன்னாள் இராணுவத் தளபதி சிசி. வைத்தியரத்னா கூறியுள்ளார்.

→

## உள்ளே


* சிங்கள அரசின் போர் வெறி - புலிகளின் குரல்
* படைபலத்தை வைத்துப்பேசப்பட்ட பேரத்திற்குக் கொடுக்கப்பட்ட அடி - 'ஒப்பறேசன் தவளை' மீது ஒரு நோக்கு
* வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள் - வேவு வீரர்கள் நினைவாக
* வீறுடன் போரிடும் வீராங்கனைகள் - பூநகரிச் சமர்தரும் சான்று
* சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள் - கடற்கரும்புலிகள் நினைவாக
* பூமிப்பந்தின் நெற்றியில் பூநகரி சுவரொட்டியானது! - கவியுரை

" 11 ஆம் திகதி ஒவ்வொரு புலிவீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன. "

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com



# புலிகளின் குரல்

## சிங்கள தேசத்தின் போர்வெறி

கடந்த ஐந்து மாத கால இடைவெளியில், ஐந்து பெரிய இராணுவ வெற்றிகளைப் புலிப்படை ஈட்டிவிட்டது.

மண்கிண்டிமலை, கிளாலிக் கடல் கரும்புலித் தாக்குதல், 'டோரா' பீரங்கிப்படகு மூழ்கடிப்பு, புலோப்பளைச் சமர், பூநகரி என்று அடுத்தடுத்துச் சிங்களப்படை தோல்விகளையும் பேரிழப்புகளையும் சந்தித்துவிட்டது.

இருந்தபொழுதிலும், 'வீழ்ந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்ற நிலைப்பாட்டுடனேயே சிங்கள அரசு காணப்படுகின்றது.

பூநகரியில் சிங்களப் படைகள் தமது சகாக்களில் ஆயிரம் பேரைத் தொலைத்துவிட்டுக் கையறுநிலையில் நின்றபோதும், அரச சார்புப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' (14. 11. 1993), "பூநகரியில் படையினர் ஈட்டிய வெற்றி" (Troops Score Victory in Pooneryn) என்று தலைப்பிட்டு, அதைத் தலையங்கச் செய்தியாகப் பிரசுரித்திருந்தது.

புலோப்பளைச் சமர் நடைபெற்றபொழுது யாழ்ப்பாணத்தில் தங்கிநின்ற சிங்களவர்களான அரச எதிர்ப்பு பத்திரிகையாளர் குழுவொன்று அரச பயங்கரவாதத்தைத் தம் கண்முன்னாலேயே தரிசித்துவிட்டுக் கொழும்பு சென்றபோதும் அங்கிருந்து, புலிகளைப் பயங்கரவாதிகள் போல் காட்டியும், போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும - அவர்கள் மறைக்க முயன்றும் முடியாத - அவர்களது பேரினவாத உணர்வை எழுத்தில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இனப் பிரச்சினை தொடர்பாக ஐ தே. கட்சி அரசாங்கத்தின் அணுகுமுறைகளை-அரச பயங்கரவாதத்தை- விமர்சித்த அந்த அரச எதிர்ப்புப் புத்திஜீவிகள், மறுபுறத்தில் சிங்கள இராணுவ இயந்திரம் பலவீனமான நிலையில் உள்ளது; அதைப் பலப்படுத்தவேண்டும் என்று சொல்லாமல் சொல்லி, தங்களது உள்மனதை - தமிழின விரோத உணர்வை - இராணுவ சிந்தனையை–திறந்துகாட்டியுள்ளார்கள்.

பூநகரியில் சிங்களப் படை சந்தித்த பேரழிவின் பின், சிங்கள தேசம் தனது இராணுவ மனோபாவத்தை ஓரளவாவது மாற்றிக்கொள்ளும் என்றே, யதார்த்தவாதிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், தனது இராணுவ தோல்விகளுக்குப்பழிவாங்குமுகமாக,தமிழர்களைக் குண்டுவீசிக் கொலைசெய்து, இனஅழிப்பிற்கான இராணுவ அணுகுமுறையை சிங்கள அரசு மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

"போர்ச் சபை நிறுவவேண்டும்", "போர்ச் சூழலில் நாடு வைக்கப்படவேண்டும்", "கட்டாய இராணுவ சேவைமூலம் சிங்களப் படைபலம் அதிகரிக்கப்படவேண்டும்", "வெளிநாட்டு உதவிகளைப்பெற்று தமிழர்களின் விடுதலைப் போரை ஒடுக்க வேண்டும்" என்றவாறாக,சிங்களதேசத்து ஆளும்வர்க்கம் போர்வெறிகொண்டலைகின்றது.

அதேவேளை, சமாதானத்திற்குச் சார்பாக அரசியல் வலுவற்ற சில தனிக்குரல்கள் சிங்கள தேசத்திலிருந்து எழுந்தபோதும், சிங்கள மக்கள் மத்தியில் கருத்துக்களை உருவாக்கவல்ல சிங்கள தேசத்துப் பத்திரிகை உலகம், "போரைத் தீவிரமாக்க வேண்டும்", "இராணுவ இயந்திரத்தை வலுப்படுத்த வேண்டும்" என்றே ஓயாது அலறுகின்றது.

சமாதானத்திற்காக எழும் குரல்கள் கூட, களநிலை சிங்கள இனத்துக்குப் பாதகமாகச் செல்கின்றதே என்ற உண்மை நிலையை உணர்ந்துகொண்டதன் விளைவாக எழுகின்றதே தவிர,தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வு வேண்டுமென்றோ அல்லது பயங்கரமான போர் வாழ்விலிருந்து தமிழர்கள் விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்துடனோ எழவில்லை.

இராணுவத்தின் புதிய தளபதியும் போரைத் தீவிரமாக்கவேண்டும் என்றே சபதமெடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவியும், நாட்டைப் போர்ச் சூழலில் வைத்திருக்க வேண்டும் என்று ஆவேசமாகக் கூறியுள்ளார். சிங்கள தேசத்தின் ஜனாதிபதியும், தனது புத்தாண்டுச் செய்தியில் தனது பழைய "பயங்கரவாதப்" பல்லவியைப் பாடியுள்ளார். இடையில் அவரது வழமையான கோமாளித்தனத்தை வெளிப்படுத்தி, "புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டால் பேச்சுக்குத் தயார்" என்றும் கூறினார். ஆனால், அது பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும் இராஜதந்திரிக்குரிய அறிவிப்பல்ல; பேரினவாதத் திமிருடன் தமிழினத்தை நோக்கி அவர் விடுத்த ஒரு மிரட்டல் செய்திதான்.

இவ்வாறு அரசும் சரி எதிர்க்கட்சியும் சரி, அரசதரப்பு புத்திஜீவிகளும்சரி அரசஎதிர்ப்பு புத்திஜீவிகளும் சரி, கருத்துக்களை உருவாக்கவல்ல பத்திரிகைகளும் சரி, சிங்களப் பிரமுகர்களும் சரி, அனைத்துப் பகுதியினரும் தமிழர்களது சுதந்திர தாகத்துக்கு எதிராக வெறித்தனமான கருத்துக்களையும், அணுகுமுறைகளையுமே வெளிப்படுத்துகின்றனர்.

பூநகரியில் ஆயிரம்பேரைக் கொன்றுவிட்டு அங்கிருந்து புலிகள் அள்ளிச்சென்றுள்ள ஆயுதங்களால், எதிர்காலத்தில் இன்னும் பாரிய சேதங்கள் சிங்களப்படைக்கு ஏற்படும் என்ற உண்மை தெரிந்திருந்தும், சிங்கள அரசு தொடர்ந்தும் போர்முரசு கொட்டியபடியுள்ளது.

இதுதான் சிங்கள தேசத்தின் தற்போதைய யதார்த்த அரசியல் நிலையாகும்.

ஆயினும் சிங்கள ஆளும்வர்க்கம், கொழும்பில் இருந்தபடி, "போர்" "போர்" என்று முழங்கிக்கொண்டிருந்தாலும், அதை நடைமுறைப்படுத்தவேண்டியது களத்திலுள்ள சிங்களப் படைகள்தான்.

ஆனால், சிறீலங்கா அரசின் கூலிப்பட்டாளமாகிய சிங்களப் படைகள், பூநகரித் தாக்குதலின் பின்னர், போரிடும் உறுதியை இழந்து குழப்ப நிலையில் உள்ளனர்; இது சிங்களத் தளபதிகளே ஏற்கும் ஒரு உண்மை.

எனவே, களத்திலுள்ள சிங்களப் படைகளுக்கு அடுத்தடுத்து பேரழிவுகளை ஏற்படுத்துவதன்மூலம், சிங்கள அரசின் போர் வெறிக்கு தக்க பதிலடி கொடுக்க முடியும்.

இதைச்சாதிப்பதாக இருந்தால், புலிகள் இயக்கத்தின் படைபலம் அதிகரிக்கப்படவேண்டும்.

இளைஞர்களும் யுவதிகளும் புலிகளுடன் இணைந்து ஆட்பலத்தைப் பெருக்குவதன்மூலம், தமிழரின் படைபலத்தைப் பலப்படுத்த வேண்டும்.

அதன்மூலம் மட்டுமே, போர்வெறிகொண்ட சிங்கள அரசிடமிருந்து, தமிழினம் தற்பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும். ○

# பெரும் படையெடுப்புக்கு...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தபொழுதிலும், பூநகரித் தாக்குதலின் பின் படையினர் மத்தியில் எழுந்துள்ள போரிடும் உறுதிச் சிதைவு, சிங்கள அரசுக்கு பெரும் கவலையைக் கொடுத்துள்ளது. சிங்கள இராணுவ இயந்திரத்துள் எழுந்துள்ள இந்த நெருக்கடி நிலையைச் சீர்படுத்த, பல்வேறு நடவடிக்கைகளை படைத்துறைத் தலைமை எடுத்துவருகின்றது. படையினர்க்கான வசதிகள் மற்றும் சலுகைகளை அதிகரித்து, படையினரின் நலன்களை மேம்படுத்த முயலும் அதேவேளை, விமானத் தாக்குதல்கள்மூலம் தமிழ் மக்களைக் கொன்று படையினரை உற்சாகப்படுத்த முயல்கின்றது.

இருந்தபொழுதிலும், வெறுமனே இந்த உற்சாகமூட்டல்கள் படையினருக்குப் போரிடும் உறுதியை வழங்கிவிடாது; அதனைக் களத்தில் ஈட்டப்படும் இராணுவ வெற்றிகள்மூலமே பெறமுடியும். இதன் பொருட்டு, நன்கு திட்டமிட்ட ரீதியில் ஒரு பாரிய படையெடுப்பை நடாத்த, சிங்களப் படைத்துறைத் தலைமை தயாரிப்புக்களைச் செய்து வருகின்றது.

பலவீனப்பட்டுப்போயுள்ள சிங்கள இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்தும் தேவையாக, ஒரு படையெடுப்பு நடைபெறவேண்டிய அவசியம் சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு எழுந்துள்ளதைப் போல, ஐ. தே. கட்சி அரசாங்கத்திற்கும் பல்வேறு அரசியல் காரணிகளுக்காக ஒரு படையெடுப்பு தேவைப்படுகின்றது.

சிங்களப் படைத்துறையின் பிரதம தளபதி என்ற பொறுப்பை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவே வகிக்கின்றார்.

எனவே, தோல்விகண்ட அல்லது அவமானப்பட்ட ஒரு இராணுவத்தின் பிரதம தளபதி என்ற நிலையில் இருந்தபடி, இவ்வாண்டு இறுதியில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள அவர் விரும்பமாட்டார்.

எனவேதான் ஒரு படையெடுப்பின்மூலம் இராணுவ வெற்றியை ஈட்டி, வெற்றி பெற்ற இராணுவத்தின் பிரதம தளபதி என்ற அங்கீகாரத்துடனேயே ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க விரும்புகின்றார். அத்துடன் பிரேமதாசா காலத்து தென்பகுதிப் படுகொலைகள் இப்போது வெளிச்சத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன; இவை சிங்கள மக்களை ஆத்திரமூட்டியபடியுள்ளன. இந்தப் புதைகுழி விவகாரத்தை ஜனாதிபதித் தேர்தலுக்குரிய சிறந்த ஆயுதமாகப் பயன்படுத்த எதிர்க்கட்சிகளும் முனைந்துள்ளன.

ஆனால் தமிழர்கள்மீதான ஒரு பாரிய இராணுவ வெற்றி, இந்தப் புதைகுழிச் சமாச்சாரத்தை மழுங்கடித்துவிடும் என்று அரசு எண்ணுகின்றது.

இவ்விதமாக, வெளிப்படையாகத் தெரியும் பல்வேறு காரணிகளை வைத்துப் பார்க்கும்போது, ஒரு பாரிய படையெடுப்புக்கான சூழல் உருவாகுவதைப் புரிந்துகொள்ள முடியும்.

இந்தக் கோடைகாலம் தொடங்கியவுடன், குறிப்பாக வடதமிழீழம் மீது - அதிலும் குறிப்பாக குடாநாடுமீது - ஒரு பாரிய படையெடுப்பைச் சிங்களப் படைகள் நடாத்த வாய்ப்புகள் உண்டு.

இந்தப் படையெடுப்பிலிருந்து தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள, ஒரேயொரு வழிதான் உண்டு.

தமிழரின் படைபலத்தைப் பெருக்கி, எதிரிக்கு தக்கபாடம் படிப்பிப்பதுதான் அந்த வழி! ○


www.eelamview.com

www.eelamview.com



# 'ஒப்பரேசன் தவளை'

## படைபலத்தை வைத்துப் பேசப்பட்ட அரசியல் பேரத்திற்குக் கொடுக்கப்பட்ட அடி!



"பாதை திறப்பு" என்ற இராஜதந்திரப் பொறி அமைத்து, சிங்கள அரசு செய்த சூழ்ச்சிகர அரசியல் காய்நகர்த்தலுக் கேற்றாற்போல், புலிகளின் தரப்பிலும் காய்களை நகர்த்திச்சென்ற அதேசமயத்தில், தலைவர் அவர்கள், பூநகரித் தளம் மீது புலிகளையும் நகர்த்தினார். இந்த வெற்றி போராட்டத்தின் புதியதொரு பரிமாணம்.

"11ஆம் திகதி ஒவ்வொரு புலிவீரனுக்கும் பத்துக் கைகள் முளைத்துவிட்டன,"

பூநகரி வெற்றியுடன் புலிகள் இயக்கம் பெற்றுவிட்ட பலத்தை தலைவர் பிரபாகரன் இவ்விதம் வெளிப்படுத்தினார்.

ஆனையிறவுச் சமரின் பின் சர்வதேசத்தின் கவனத்தைப் பெருமளவு ஈர்த்த ஒரு செருக்களமாக, பூநகரி கூட்டுப்படைத் தளம் மீதான தாக்குதல் அமைந்துவிட்டது. முன்னையதைப் போன்றே இதுவும் புலிகள் இயக்கத்தின் இராணுவத் திறனை உலகிற்குப் புலப்படுத்தியுள்ளது. ஆனாலும் பூநகரியில் சிங்களப் படைகள் சந்தித்தபேரிழப்பு, சிங்களப் பேரினவாதத்தின் போர்வெறியை முனைமழுங்கச்செய்துவிட்டது.

பலமான கடற்படைத் தளத்தையும் சக்திவாய்ந்த கவச வாகனப் படைப்பிரிவையும் கொண்டபடி, புலிகள் தாக்கப் போகின்றார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த 2000 இற்கும் மேற்பட்ட சிங்களப் படையையும், 16 கி. மீ. நீளமும் 25 கி. மீ. சுற்றளவையும் கொண்ட பூநகரி கூட்டுத் தளத்தை அழித்தொழிப்பதென்பது, ஒரு இமாலய சாதனைதான்.

புலிவீரர்கள் அதனைச் சாதித்துபெருமளவுவெற்றியைப் பெற்றும்விட்டனர். பூநகரி கூட்டுத்தளம்மீதான தாக்குதலில் புலிகள் பெற்ற பெருவெற்றியில் ஒன்றாக, அங்கிருந்து கைப்பற்றப்பட்ட பெருமளவிலான சக்திவாய்ந்த ஆயுதங்களைக் குறிப்பிடலாம். இவை சாதாரண ஆயுதங்கள் அல்ல; போரின் போக்கை புலிவீரர்களுக்குச் சாதகமாகத் திசை திருப்பப்போகும் ஆயுதங்கள். டாங்கி, 120 மி. மீ. சுடுகலன்கள், நீருந்து விசைப்படகுகள், 50 கலிபர் துப்பாக்கிகள் மற்றும் ஏராளமான கனரக ஆயுதங்களும் பெருந்தொகையிலான வெடிமருந்துகளும், எமது விடுதலைப் போராட்டத்திற்குப் புத்துணர்ச்சியையும் புதிய பலத்தையும் ஊட்டியுள்ளன. பூநகரியில் சிங்களப் படைகளுக்கு ஏற்பட்ட உயிரிழப்பும் பிரதானமானது.

அதேவேளை, பெரிய நாடுகளுக்கிடையில் பெருமெடுப்பில் நடைபெறும்போர்களைத்தவிர, ஒரே தாக்குதலில் 1000 படையினர் கொல்லப்படுவதென்பது, இதுதான் முதற்சம்பவமாக இருக்கும். இந்தப் பெருநாசத்தால் சிங்கள இனமே சோகத்தில் ஆழ்ந்துபோயுள்ளது. "எல்லா இடங்களிலும் வெள்ளைக்கொடிகள் பறக்கின்றன" (துக்கத்தை வெளிப்படுத்த வெள்ளைக்கொடிகளையே சிங்கள மக்கள் பயன்படுத்துவர்) என்று, ஒரு ஆங்கிலப் பத்திரிகை சிங்கள தேசத்தின் இழப்பைச் சுட்டிக்காட்டுகின்றது.

குடாநாட்டின் வாசலில் இருக்கும் பூநகரிப் பகுதியானது இராணுவ - அரசியல் - பூகோளரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தக் கேந்திர வலயத்தைக் கைப்பற்றுவதன்மூலம், இரண்டாவது ஈழப் போரிற்கென்று சிங்கள அரசு தயாரித்த புதிய போர்முறைத் திட்டத்தை அமுல்படுத்த, சிங்களப் படைத்துறை முனைந்தது. அதன்படி பூநகரியில் ஒரு கூட்டுப்படைத்தளத்தை அது அமைத்துக்கொண்டது.

சிங்கள ஆளும் வர்க்கம் வரைந்த புதிய போர்முறைத் திட்டத்தின் நோக்கம் யாழ். குடாநாட்டைப் பூரணமாக முற்றுகையிடுவதுதான். இந்த இராணுவ முற்றுகைமூலம் பொது மக்களின் போராட்ட உறுதியை உடைப்பதும், புலிகள்– மக்கள் உறவைச் சிதைத்து புலிகளைத் தனிமைப்படுத்துவதும், இறுதியில் குடாநாட்டைக் கைப்பற்றி புலிகளை அழித்துப் போராட்டத்தை நசுக்கிவிடுவதும்தான் சிங்கள அரசின் எண்ணம்.

ஆனால், சிங்கள அரசின் முற்றுகைத் திட்டத்தில் கடற்புலிகள் ஒரு ஓட்டையை ஏற்படுத்திவிட்டார்கள். கடற்புலிகளின் எழுச்சியும் அவர்களின் பலத்துடன் நடந்த நீரேரிப் படகுப் பயணமும், சிங்கள அரசின் புதிய போர் முறைத் திட்டத்திற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது.

இந்த நிலையில்தான் "பாதை திறப்பு" என்ற போர்வையில் இராஜதந்திரப் பொறியொன்றை அமைத்து, தனது போர்முறைத் திட்டத்தில் ஏற்பட்ட உடைவைச் சீராக்க சிங்கள அரசு முயன்றது.

குடாநாடுமீதான இராணுவ முற்றுகையால் எழுந்த பொது மக்களின் கஷ்டங்களை விவாதப் பொருளாக்கி, புலிகள் இயக்கத்திற்கெதிராகச் சர்வதேச

(16ஆம் பக்கம் பார்க்க)



'தவளை' முனையில், புலிவீரர்கள் கைப்பற்றிய போர் டாங்கியுடன், எமது மூத்த தளபதி சொர்ணம்.

பெரிய நாடுகளுக்கிடையில்; பெருமெடுப்பில் நடைபெறும் போர்களைத் தவிர, ஒரே தாக்குதலில் ஆயிரம் படையினர் கொல்லப்படுவதென்பது, இதுதான் முதற் சம்பவமாக இருக்கும்.

www.eelamview.com

www.eelamview.com



# பூநகரி கூட்டுப்படைத்தளம்

## அமைப்பு - பலம் - வரலாற்றுப் பின்னணி

கூட்டுப்படைத்தளம் (Military Complex) என்ற சொற்பதத்தின் இராணுவ பரிமாணம் மிக உயர்ந்தது.

தரைப்படை, கடற்படை, வான்படை என்ற முப்படைகளில் இரண்டை அல்லது மூன்றையும் சேர்த்து ஒன்றாக நிறுவப்படும் ஒரு பலமான இராணுவ நிலையையே, கூட்டுப்படைத்தளம் என அழைப்பர்.

சாதாரணமாக ஒரு முகாம் (Camp) அல்லது இதைவிட இராணுவ பரிமாணத்தில் உயர்ந்த ஒரு தளம் (Base) என்பவற்றைவிடக் கூட்டுப்படைத்தளம் ( Military Complex), ஆட்தொகையிலும் அது அமைந்திருக்கும் பரப்பளவிலும் பிரமாண்டமானதாக இருக்கும்.

பூநகரி கூட்டுத்தளமானது தரைப்படையினரையும், கடற்படையினரையும் சேர்தது 2560 பேரைக் கொண்டு விளங்கியதுடன், 33 ச. கி. மீ. பரப்பளவிலும் அமைக்கப்பட்டிருந்தது நாகதேவன்துறையிலிருந்து கெளதாரிமுனைவரை 16 கி. மீ. தூரத்தில் இககூட்டுத்தளம் நீண்டு கிடந்தது.

350இற்கும்மேற்பட்ட கடற்படையினர் நாகதேவன்துறை - ஞானிமடம் பகுதியில் தளமமைத்திருநதனர். நவீன ரக 'றாடர்'கள் மறறும் கண்காணிப்புக் கருவிகளுடன் நீருந்து விசைப்படகுகள், சக்தி வாய்ந்த வெளிச்சம் பாய்ச்சிகளையும் தம்வசம் வைத்திருந்த கடற்படையினர், இவற்றின் துணையுடன் பூநகரி கூட்டுத்தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுததியதுடன், கிளாலிக் கடல்நீரேரியையும் கட்டுப்படுத்த விழைந்தனர்.

இதேபோல கவசவாகனப் படைப்பிரிவு, பீரங்கிப் படைப்பிரிவு, காலாட்படைப்பிரிவு, விசேடபயிற்சி பெற்ற சிறப்புப் படைப்பிரிவு என்று ஏறக்குறைய 2200 இராணுவத்தினர், 5 முகாம்களையும் பல்வேறு மினிமுகாம்களையும் காவல் அரண்களையும் அமைத்து, இப்படைத்தளத்தைப் பாதுகாத்தனர்.

இக்கூட்டுப்படைத்தளத்தின் பிரதான முகாம்களாக,

1. வில்லடி கட்டளை முகாம்.
2. நாகதேவன்துறை படகுத்தளம்.
3. ஞானிமடம் கடற்படைத்தளம்.
4. கூமர் எனும் பகுதியில், இறங்கு துறை வசதியுடன் இருந்த பகுதியைச் சுற்றி ஒரு முகாம்.
5. பள்ளிக்குடாவுக்கும் கூமருக்கும் இடையிலிருந்த களஞ்சிய முகாம்.
6. ஆலடி முகாம்.
7. பள்ளிக்குடா முகாம்.

(இலக்கங்கள் வரைபடத்தின்படி)

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சில மினி முகாம்களையும் பல அவதானிப்பு நிலைகளையும் நூற்றுக் கணக்கான காவல் அரண்களையும் கொண்டுவிளங்கிய இந்த இராணுவ காவல்நிலைகளைச் சூழ கம்பிச் சுருள்கள், மிதிவெடிகள், மண் அணைகள் என்று பலமான தற்காப்பு நடவடிக்கைகளும் செய்யப்பட்டிருந்தன.

இக்கூட்டுப்படைத்தளத்திற்கான உணவு மற்றும் அனைத்து விநியோகங்களும் கெளதாரி முனைக்கருகில் இருந்த - பெருங் கடலுடன் தொடர்புடைய - கூமர் என்ற கடற்கரைப் பகுதியூடாகவே நடைபெற்றன.

ஆழங்குறைந்த நீர்ப்பரப்பால் மூன்று புறத்திலும் சூழப்பட்டிருக்கும் இந்தக் கூட்டுபபடைத்தளத்தில், கூமர் பகுதி மட்டும்தான் கடல்வழித் தரையிறக்கத்துக்கு ஏற்றவாறு சற்று ஆழங்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்த இறங்குதுறையைச் சுற்றி பலமானதொரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு, அப்பகுதி நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது.


இக்கூட்டுப்படைத்தளத்தின் ஒட்டுமொத்த பலத்தை அல்லது அதன் பாதுகாப்பை எடைபோட்டுப் பார்க்கவேண்டுமாயின் அதை உட்பலம், வெளிப்பலம் என இரண்டாக வகுத்து ஆராய்ந்து பார்ப்பதே சிறந்தது.

வெளிப்பலத்தைப் பொறுத்தளவில் கடல்தான் எதிரியின் பிரதான பலம். நீண்டு பரந்தபடி படைத்தளத்தை அரவணைத்துச் செல்லும் கிளாலிக் கடல்நீரேரியும், தேவை ஏற்படும்போது மன்னார்ப் பெருங்கடலூடாக 'டோரா' மற்றும் பீரங்கிப் படகுகளின் துணையுடன் துருப்புக்களைத் தரையிறக்கக்கூடிய ஒரு தரையிறங்கு துறையும் (கூமர்) இந்தக் கடற் பலத்திற்கு ஆதாரமாகும். அதேவேளை, இக்கூட்டுத்தளத்திற்கு மிக அருகாமையில் இரு முனைகளிலும் இருக்கும்ஆனையிறவு, மண்டைதீவு தளங்களும் ஒரு துணைவலுவாகவே விளங்குகின்றன. ஆபத்து வேளைகளில் இந்த இரு படைத்தளங்களும் வெளியிலிருந்து பூநகரிக்குக் கைகொடுக்கக்கூடியவை. இவற்றுடன் வயல்களையும் சிறு பற்றைகளையும்கொண்ட பூநகரிப் பிரதேசத்தின் தரை அமைப்பு, வானிலிருந்தபடி கட்டுப்படுத்தக் கூடிய தன்மையையே கொண்டுள்ளது. இவ்விதமாக பூநகரி கூட்டுத்தளத்தின் வெளிப்பலம் சிறப்பாக அமைந்திருந்தது.

உட்பலத்தை, அதாவது அதன் சொந்தப் பலத்தைப் பொறுத்தளவில் 2560 படையினரைக் கொண்ட அதன் ஆட்பலம்தான் பிரமாண்டமானது. டாங்கிகள், 120 மி. மீ. மோட்டார் பீரங்கிகளுடன் நாகதேவன்துறை படகுத்தளமும் இந்தச் சொந்தப் பலத்திற்கு மேலும் வலுவூட்டுகின்றது.

இக்கூட்டுப்படைத்தளத்தில் தாக்குதலுக்கு உட்படக்கூடிய வாய்ப்புகளுடன் இருந்த பகுதி, ஞானிமடத்திலிருந்து பள்ளிக்குடா வரையிலான சுமார் 7 கி. மீ. நீள நிலப் பகுதிதான். இந்தப் பகுதிதான் இக்


**காலத்திற்குக் காலம் அந்நியப் படையெடுப்பாளர்களின் முக்கிய இலக்காக பூநகரி இருப்பதற்குரிய காரணம், யாழ். தீபகற்பத்தின் பிரதான வாயில்களில் ஒன்றாக - கேந்திர முக்கியத்துவத்துடன் அது இருப்பதுதான்.**




www.eelamview.com

www.eelamview.com





எமது மூத்த தளபதி பொட்டு அவர்கள், 'ஒப்பறேசன் தவளை' தாக்குதல் வழிமுறையை களமுனைத் தளபதிகளுக்கு விளக்குகின்றார்.

**டாங்கிகள், பீரங்கிகள், விசைப்படகுகள், 'றாடர்'களுடன் நவீன ஆயுத கருவிகள் சகிதம் 2560 துருப்புக்களைக் கொண்ட 6 முகாம்களை உள்ளடக்கிய, பாரிய கூட்டுப்படைத்தளம் அது.**

கூட்டுத் தளத்தின் தரைத்தொடர்புடைய பகுதியாகும்.

இந்த 16 கி. மீ. நீளத்திற்கும் காவல் அரண்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு முன்னால் ஏறக்குறைய ஐந்துஅடி உயரமான மண் அணை அமைக்கப்பட்டு, அந்த அணைக்கு முன்னால் இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் முட்கம்பிச் சுருளிட்டுப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதேவேளை நீரேரி ஓரமாக நாகதேவன்துறையிலிருந்து சங்குப்பிட்டி வரையும், அதற்கு அப்பாலும் மறுபுறத்தில் பெருங்கடலுடன் தொடர்புடைய பள்ளிக்குடாவிலிருந்து கூமர்முனை வரையும், அதற்கு அப்பாலும் கரையோரமாகத் தண்ணீருக்குள்ளேயே முட்கம்பிச் சுருள்கள் இட்டு முள்வேலி அமைத்து, தற்பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த மண் அணைகள், முட்கம்பிச் சுருள்கள், முள்வேலிகளையும்விட தேவையான இடங்களிலெல்லாம் மிதிவெடிகள் பல்லாயிரக்கணக்கில் புதைத்துவைக்கப்பட்டும், ஞானிமடம் - சங்குப்பிட்டி ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த பாரிய வெளிச்சம்பாய்ச்சிகளால் (Search Light) நீரேரி சதா கண்காணிக்கப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தன.

இன்று உலகெங்கும் பேசப்படும் ஊராகிய பூநகரிப் பகுதியானது, 1980 களில் தொல்பொருள் ஆய்வாளர்களின் இலக்காக மாறிப் பிரபல்யம் அடையத் தொடங்கியது. ஈழத் தமிழர்களின் தொன்மையான குடியிருப்புகளில் பூநகரிப் பகுதியும் ஒன்று என்று அவர்கள் கண்டறிந்தார்கள்; அந்தத் தொல்குடித் தமிழர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களின் சிதைவுகளை அதற்கு ஆதாரமாகக்காட்டி, தமது தொல்லியல் முடிவுகளை வெளிப்படுத்தினர்.

பூநகரியானது ஈழத் தமிழர்களின் தொன்மையை மட்டுமல்ல, காலத்திற்குக் காலம் அந்நியப் படையெடுப்பாளர்களின் ஆக்கிரமிப்பையும் கண்டுள்ளது· யாழ் தீபகற்பத்தினுள் புகும் பிரதான வாயில்களில் ஒன்றாகப் பூநகரிப் பகுதி இருப்பதுதான் இதற்குரிய காரணம்.

பண்டைத் தமிழர்களாகிய எமது முன்னோர்கள், பூநகரிப் பிரதேசத்திலிருக்கும் மண்ணித்தலைப் பகுதியிலிருந்து கிழக்கு அரியாலை வழியாகவும், நாகதேவன்துறையிலிருந்து கச்சாய் வழியூடாகவும் போக்குவரத்துக்களைச் செய்திருந்தனர்.

மன்னாரைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் அங்கிருந்து தரைவழியாக பூநகரி வந்து, பூநகரியிலிருந்து நாகதேவன்துறை வந்து, அங்கிருந்து நேர் வடதிசையில் இருக்கும் கச்சாயை அடைந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

வன்னிப் பெருநிலமானது அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்குள் அடங்கியிருந்த போதும், வன்னியின் குறுநில மன்னர்கள் ஒல்லாந்தருக்கு அடிபணிய மறுத்தனர். இதனால் அச்சமுற்ற ஒல்லாந்தர்கள் பூநகரியில் ஒரு கோட்டையை அமைத்து, மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய தமது பிரயாணப் பாதையைப் பாதுகாக்க முயன்றனர்.

16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் கட்டிய பூநகரி கோட்டை, பிரிட்டிஷ்காரரின் ஆட்சிக்காலத்திலிருந்து வெள்ளைத்துரைமாரினதும் பின்னர் அரசாங்க மேலாளர்களினதும் தங்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டது.

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டபின், தமிழினத்திற்கெதிரான இன ஒடுக்கல் முனைப்புற்றது. இந்த இன ஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் மக்களிடம் எழுந்த எதிர்ப்புணர்வானது ஆயுதப் போராக வடிவமெடுத்தது. இந்த ஆயுதப்போராளிகளின் அசைவியக்கத்தைத் தடுத்து நிறுத்த, வன்னி நிலப்பகுதியை குடாநாட்டுடன் இணைத்திருந்த பிரதான பாதைகளான ஆனையிறவும் - பூநகரியும் ஆயுதப் படைகளின் இராணுவ கேந்திரங்களாக மாறின.

1981 ஆம் ஆண்டு செப். 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, பூநகரிக் கோட்டை சிங்களப் படைமுகாமாக மாற்றப்பட்டது. பூநகரிப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்க்கையைக் கழிக்கத்தொடங்கினர்.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி, பூநகரிக் கோட்டை முகாம் மீது புலிவீரர்கள் ஒரு பாரிய தாக்குதலைத் தொடுத்தனர்.

இத்தாக்குதல் நடந்த தினத்திற்குச் சில நாட்கள் முன்னர்தான் தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அழைத்த இந்திய அரசு, எமது போராட்டத்தை ஒடுக்கவென இந்திய - சிங்கள அரசுகளால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்குமாறு வற்புறுத்தியது.

ஒரு பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றின்மூலம் எமது இயக்கத்தின் இராணுவ பலத்தை வெளிப்படுத்தி, தலைவர்மீது இந்திய அரசு திணித்த அழுத்தத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது.

இத்தகையதொரு அரசியல் இலக்குடன் பூநகரி முகாம் தாக்கப்பட்டது.

ஆனால் அருகிலிருந்த இன்னொரு இராணுவ முகாமிலிருந்து (4ஆம் கட்டை) படை உதவியைப் பெற்றுக்கொண்ட கோட்டை, வீழ்ந்துவிடாது தப்பிக்கொண்டது. இருந்தாலும் புலிகளின் இராணுவ பலத்தை அம்முகாம் தாக்குதல் வெளிப்படுத்தியிருந்தது.

இத் தாக்குகல் நடந்த இரண்டாம் நாள் (29ஆம் திகதி) அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், சிங்களப் படைக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில், பலவீனமான - தம்மால் பாதுகாக்க முடியாத - படைமுகாம்களை சிங்கள அரசு விலக்கிக்கொண்டது.


பூநகரிக் கோட்டையிலிருந்தும் அருகிலிருந்த 4ஆம் கட்டை முகாமிலிருந்தும் சிங்களப் படைகள் விலகிக்கொண்டன.

சில வாரங்களின் பின் இந்தியப் படைகள் பூநகரியில் குடிகொண்டன.

தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளைப் போலவும் பூநகரியையும் அசிங்கம்செய்து அக்கிரமங்கள் புரிந்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகள், 1989 இன் இறுதியில் அங்கிருந்து வெளியேறின.

மீண்டும் 1991 ஒக்ரோபர் 17 ஆம் நாளன்று, ஊர்காவற்றுறையிலிருந்து மண்டைதீவையும் ஆக்கிரமித்தபடி புறப்பட்ட சிங்களப் படைகள், பூநகரிப்பகுதியை ஆக்கிரமித்து, நாகதேவன்துறை - ஞானிமடம் பகுதியில் ஒரு கடற் தளத்தையும் அமைத்து, பிரமாண்டமான பூநகரி கூட்டுத்தளத்தை நிறுவினர்.

இந்தக் கூட்டுத்தளம், 11.11.93 இலிருந்து 3 நாட்களாக நடாத்தப்பட்ட 'ஒப்பறேசன் தவளை' தாக்குதல் நடவடிக்கைமூலம், விடுதலைப் புலி வீரர்களால் தகர்த்தழிக்கப்பட்டது! ○



ஞானிமடம் கடற்படைத்தளத்தோடு இணைந்த, நாகதேவன்துறை படகுத்தளம்.

www.eelamview.com

www.eelamview.com



# சமர்க் களங்களில் 'கமரா'க்கள்

## புலிகளின் வீரசாதனைகளைச் சொல்லப்போகும் 'போர் ஆவணங்கள்'

### "ஒப்பரேசன் யாழ்தேவி"

குடாநாட்டின் குரல் வளையை நெரிக்க சிங்களப் படை முனைப்போடு எத்தனித்த பெருமெடுப்பிலான படையெடுப்பு அது.

ஆனையிறவிலிருந்து நகர்ந்தவர்களை, புலோப்பளையில் வைத்து எதிர்கொண்டு புலிகள் நடாத்திய வீரச்சமர் பிரசித்தி பெற்றது.

அந்த வரலாற்றுச் சமரைத் தத்ரூபமாகப் படம்பிடித்த இரண்டு புலிவீரர்களை, அண்மையில் தலைவர் அவர்கள் பரிசளித்துப் பாராட்டினார்.

புலிப்படை வீரர்களின் ஆக்ரோசத் தாக்குதலில் சுருண்டு விழுகின்ற எதிரியின் படையாட்கள் –

தப்பினோம் பிழைத்தோமென சகாக்களையும் தளபாடங்களையும் கைவிட்டோடுகின்ற சிங்கள வீரர்கள்–

தகர்த்தழிக்கப்படுகின்ற - பகைவனின் நம்பிக்கை நட்சத்திரமான – போர் டாங்கிகள் –

குண்டுவீசவீசக் குமுறியெழுந்து போரிடும் புலிப்படை வீரர்கள் –

கை ஒன்றை முற்றாக இழந்த நிலையிலும், களத்தில் வீழும் வரை – வீரமுடன் சண்டையிட்டு – முன்னேறுகின்ற தமிழ் மறவன் என்ற கப்டன் கல்கத் –

சமரின் ஒரு முனையை வழிநடாத்தி, எதிரியின் குண்டுச் சிதறல்களால் களப்பலியாகின்ற நாயகன் எனும் லெப்ரினன்ற் கேணல் நரேஸ் –

இப்படியாக, முழுமையான அந்தச் சமரையே – அதன் வீரத்தன்மையையும் தியாகத்தன்மையையும் குறையாத உயிரோட்டத்தோடு – கமராக்களினால் பதிவுசெய்துகொண்டு வந்திருந்தார்கள் அந்தப் புலிவீரர்கள்.

பரிசு பெற்றவர்களில் ஒருவர் சுதாகர். இவர் வீடியோ படப்பிடிப்பாளர். அடுத்தவர் சுதாகரன். புகைப்படமெடுக்கும்போது படுகாயமடைந்ததால் ஊன்றுகோல்களின் உதவியுடன் நடந்துவந்த அவருக்கு, மேடையிலிருந்து இறங்கிவந்து தலைவர் பரிசை வழங்கினார்.

"முன்னே இருந்து சுட்டுக்கொண்டு இருக்கும் எதிரிக்கு முன்னால் நின்று, திருப்பிச்சுட முடியாத ஒரு கருவியுடன் படமெடுப்பது என்பது ஒரு சாதாரண காரியமல்ல. சண்டைமுனைகளில் படமெடுப்பதற்கு வித்தியாசமான ஒரு மனத்துணிச்சல் தேவை" என, அந்தப் பரிசளிப்பு நிகழ்வில் கருத்துரை வழங்கும்போது கூறிய தலைவர் அவர்கள், "சண்டைகளில் படமெடுக்கும் போராளிகளை, எமது வேவு வீரர்களைப் போன்றவர்கள் என்று சொல்லலாம். ஏனெனில் எந்தநொடியிலும் – பெரும்பாலும் தவிர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பம் குறைந்த – சாவு அவர்களுக்கு ஏற்படலாம். அண்மைக் காலத்தில்கூட, புலோப்பளைச் சமரில் குமணன் என்ற போராளியையும் பூநகரிச் சமரில் ஈழப்பிரியா என்ற பெண் போராளியையும், படம்பிடிக்கும் பணியில் நாம் இழந்திருக்கிறோம்" என, அவர்களை நினைவுகூர்ந்தார்.



2 ஆம் லெப். ஈழப்பிரியா



லெப். குமணன்

லெப். குமணன், மன்னார் முருங்கனைச் சேர்ந்தவன். செல்வரட்ணம் குணரட்ணம் என்பது அவன் இயற்பெயர். மன்னார் மாவட்ட தாக்குதற் படையணியில் வீடியோ படப்பிடிப்பாளனாக அவன் இருந்தான். கடந்த யூன் மாதத்தில், புத்தளம் மாவட்டத்திற்குள் – எதிரியின் கட்டுப்பாட்டுப் பிராந்தியத்தினுள் – ஊடுருவி, பகைவன் சற்றும் எதிர்பாராத மையமான இலவன்குளம் என்ற இடத்திலிருந்த காவற்படையின் அரண்கள்மீது புலிவீரர்கள் நடாத்திய இருவேறு அதிரடித் தாக்குதல்களை, குமணன் முழுமையாகப் படம்பிடித்திருந்தான்.

அந்த வெற்றிகரமான நேரடிச் சண்டைகளின் படங்கள், எமதியக்கத்தின் 'நிதர்சனம்' தயாரிப்பான 'ஒளிவீச்சு' வீடியோ சஞ்சிகையின் யூன் மாத வெளியீட்டில் இடம்பெற்றுள்ளன.

2 ஆம் லெப். ஈழப்பிரியா யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்தவள். நவரட்ணம் மதிவதனி என்பது அவளது இயற்பெயர். வீடியோ படத்துறைக்கு அவள் புதியவள். எமதியக்கத்தின் படத்துறைப் பயிற்சிக் கல்லூரியில் பயின்றுகொண்டிருந்தவள். 'ஒப்பரேசன் தவளை' அவளுடைய முதற்களம். அதில் வீடியோ படம்பிடிக்கும் பணியில் ஈடுபட்டு, அச்சமரிலேயே களப்பலியாகினாள் என்பது குறிப்பிடத்தக்கது.

வீடியோ படமாகினும் சரி, அல்லது புகைப்படமாகினும் சரி, போர்க்களங்களைப் படம்பிடிப்பதென்பது ஒரு அசாதாரணமான காரியம்தான். உயிராபத்து நிறைந்த அபாயகரமான ஒரு முயற்சி அது.

வெளி ஆட்களைப் பொறுத்தவரை இது ஒரு பிரமிப்பூட்டும் வீரச்செயல்.

சண்டையிடும் அணிகளுள் ஒருவராக – தானும் ஒரு போர் வீரராக – ஆனால், துப்பாக்கிக்குப் பதிலாக 'கமரா'வினைக் கையிலெடுத்து, படம் பிடிப்பதற்காக ஒரு போராளி களத்தில் இறங்குகின்றார்.

சமர்க்களம் ஒவ்வொரு நொடியும் துடித்துக்கொண்டிருக்கும். ஒரு இம்மியும் பிசகாமல் எதிரியின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக அவதானித்து, அதற்கமைய அதி துரிதமாகச் செயற்பட வேண்டிய சூழ்நிலை அது. காற்றுக்குப் பதிலாக துவக்கு ரவைகளும் பீரங்கிக் குண்டுகளும் வீசும் அந்த ரணகளத்தில், 'கமரா'வை கண்ணுக்குள் நுழைத்துக்கொண்டு படம்பிடிப்பது எத்தகைய ஆபத்தான பணி என்பதை விவரிக்கத் தேவையில்லை.

புலோப்பளையில் புகைப்படமெடுக்கும்போது பலத்த காயத்துக்குள்ளாகி, சுய நினைவு அற்ற நிலையில் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சுதாகரன் சொன்னார்:

"எமது தோழர்கள் ஆக்ரோசமாகப் போரிட்டு, வெற்றிக் கூக்குரலோடு களத்தில் முன்னேறும்போது எமக்குள் பிரவகிக்கும் உற்சாகம், எங்களுக்குரிய பணியைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென எம்மைத் தூண்டுகிறது. அந்த நேரத்தில் வேறெதுவும் மனதை ஈர்க்காது."

புலோப்பளைச்சமரைத் திறம்பட வீடியோ படம்பிடித்த சுதாகர் கூறினார்:

"போரிடும்போது எங்கள் படை வீரர்கள், வெளி ஆட்களால் நம்புதற்கரிய விதமாகப் படைக்கின்ற வீரசாதனைகளையும், அவர்கள் புரியும் உயரிய தியாகங்களையும் நேரடித் தரிசனங்களாக உலகிற்குக் காட்டவேண்டும் என்ற உணர்வுமட்டுமே, அந்த நேரங்களில் மேலோங்கி நிற்கும்; குண்டுகளைப் பற்றி யோசிக்க அங்கு நேரமிருக்காது."

சாதாரணமாக ஒரு போர் விமானம் எமக்கு மேலே வட்டமிடுவதைக் கண்டாலே, தன்னிச்சையாக எம் கால்கள் பதுங்குகுழி நோக்கியோடுகின்றன. கணிசமான ஒரு தூரத்தில் நிகழும் ஒரு குண்டு வீச்சின் அதிர்விற்கே, நிற்கும் இடத்திலேயே விழுந்து படுத்து நாம் பாதுகாப்புத் தேடுகின்றோம். எமது சுய எண்ணப்பாடுகளுக்கு அவகாசமில்லாமல், இயல்பு உந்துதலாக இவை நடந்துவிடுகின்றன. இத்தகைய ஒரு நிலையிலிருந்து, கையில் ஆயுதங்களும் இன்றி சண்டைகளில் அவர்கள் ஆற்றும் பணியை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்தப் பணியில் ஈடுபட்டு வீரச்சாவை அணைத்துக்கொண்ட நண்பர்களைத் தவிர, பலர் படுகாயமடைந்துள்ளார்கள்; சிலர் உடலில் அங்கங்களையும் இழந்துவிட்டார்கள்.

சதா குண்டுகள் அதிரும் இரத்தக்களத்தில் – பதற்றமின்றி, தளர்வின்றி, நிதானமாக, செயற்திறன்மிக்க விவேகத்துடன் – அபாரமான துணிச்சலோடும், அர்ப்பண உணர்வோடும் அந்த அரிய பணியை ஆற்றுகின்ற எங்கள் நண்பர்கள் போற்றுதற்குரியவர்கள்.

சர்வதேச மட்டத்தில் – செய்திப்பரம்பல் உலகில் – போர் முனைகளை நேரடியாகக் களத்தில் நின்று படம்பிடிப்பது, மிகப் பிரபல்யமான ஒரு துறை சார் செயற்பாடு. உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் பல்வேறு காலங்களில் நடந்த பிரசித்திபெற்ற போர்களையெல்லாம், இப்போதும் அதே உயிரோட்டத்துடன் நாம் பார்க்கக்கூடியதாக, படத்துறை வல்லுனர்கள் எடுத்துத்தந்துள்ளார்கள். அங்கெல்லாம் நடந்த ஆச்சரியமான சம்பவங்களை வெளி உலகிற்குத் தந்தவர்கள் படப்பிடிப்பாளர்கள்தான் என்று சொல்லலாம். நிகழ்காலத்திலும் அவர்கள் தந்துகொண்டே இருக்கின்றார்கள்.

அதேபோலவே, இன்றைய காலத்தில் தமிழீழத்தில் நடக்கின்ற சுதந்திரப் போராட்டத்தை – மரணத்தின் விளிம்படியில் நின்று – எங்கள் வீரர்கள் படங்களாக உருவாக்குகின்றார்கள்.

இருப்பினும்,

எங்கள் வீரர்களை சர்வதேச படப்பிடிப்பாளர்களோடு ஒப்பிட முடியாது. ஏனென்றால், எம்மவர்கள் - ஒரு ஆயுதபாணியைப் போல – யுத்தத்தின் உச்சமுனையில் நிற்பார்கள். ஆனால் வெளிநாடுகளில் கணிசமான தொலைவில்தான் நிற்பார்கள். சில சமயங்களில் அது கி. மீ. அளவிலும் இருக்கும். ஏனெனில், எம்மவர்கள் அடிப்படை வசதிகள்கூட இல்லாத, மிகச் சாதாரணமான -

(16 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



# வீறுடன் போராடும் வீராங்கனைகள்

## - பூநகரிச் சமர் தரும் சான்றுகள் -

"அந்த மறக்கமுடியாத நொவெம்பர் 11ஆம் நாள், நானும் இன்னும் மூவரும் எமது பூநகரி - சங்குப்பிட்டி வீதிக் காவலரணில் இருந்தோம். இரவு மழை. திடீரென கடல் - தரை மார்க்கமாக வந்திறங்கிய போராளிகள் எங்கள் அரண்களை உக்கிரமாகத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் பெண் போராளிகள். நெருங்கி நின்று ஆர். பி ஜி. எறிகணைகள், றைஃபிள்கள்மூலம் எம்மைத் தாககினர். நாங்கள் எதிர்பாரா அதிர்ச்சிக்குள்ளானோம். எனினும் சுட்டுக்கொண்டிருந்தோம். எங்களைச் சூழ இருந்த சுமார் 20 அரண்கள் அழிந்துகொண்டிருந்தன. இது தொடர்ந்தபோது எம்மவரில் முப்பதிற்கும் மேலான எண்ணிக்கையினர் சிதறி ஓடுவது தெரிந்தது. நானும் காயப்பட்ட நிலையில் தவழ்ந்து உருண்டு ஒரு பற்றைக்குள் பதுங்கிக்கொண்டேன்."

- இது, சிங்கள 'கஜபாகு றெஜிமெண்ட்' படைப்பிரிவைச் சேர்ந்த ..ச். எம். ஜெயந்த என்பவர் கொழும்பு மருத்துவமனையிலிருந்தபடி 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி.

இதேவரிசையில் இதுபோல இன்னும் இரண்டு பேட்டிகளையும் இந்த 21 11 1993ஆம் திகதி இதழ் தாங்கியுள்ளது. இவையும் 'பெண்புலிகள் எம்மைச் சூழ நின்று தாக்கினர். அவர்களது உக்கிர தாக்குதலால் நாங்கள் சிதறி ஓடினோம். பலர் மடிந்திட சிலர் பற்றைக் காட்டுக்குள் ஓடினர்' என்ற வகையிலேயே அமைந்துள்ளது.

இவ்விதம் உலகின் மதிப்புக்கும் வியப்புக்கும் உரியவர்களாகி தமிழீழத்தின் விடுதலைப் புலிகளது மகளிர் படைப்பிரிவினர். அஞ்சாத நெஞ்சுடையோராய் நின்று தமிழீழ அன்னைக்குத் தம் பங்கைச் செலுத்துகின்றனர். புதிய வரலாறு படைக்கப்படுகிறது. சுதந்திர தமிழீழம் அனலின் நடுவே நின்று செதுக்கப்படுகிறது.

"துன்பம் கொடுப்பவனுக்கு நீ துன்பம் கொடு"- இது வள்ளுவ வாக்கு.

"கொல்ல வருபவனை நீ கொல்; வெல்!" என்பது, எம் ஈடிணையற்ற தலைவர் வே.பிரபாகரனின் கர்ச்சனை.

இவை இன்று நிறைவேறி வருகின்றன.

இலட்சிய ஈடுபாடு, அதில் அர்ப்பணிப்பு, ஈடிணையற்ற தலைமையை ஏற்ற துணிவு, தலைசிறந்த பயிற்சி, விவேகம், நாம் விடுதலைப் புலிகள் - வீரவேங்கைகள் என்ற உணர்வு இந்த விடுதலைப் போராட்டத்தை ஆயுதபலமாக்கி எடுத்துச் செல்கிறது.


இவர்களைப் பற்றி 'புலிகள் இயக்கத்தின் பெண் போராளிகள்' (Women Fighters of the liberation Tigers) எனும் நூலில் வரும் வரிகள் இதோ -

"பெண் போராளிகள் வாழ்க்கை ஒரு முற்றுமுழுதும் வேறுபட்ட - வீறுகொண்ட - புதிய உலகைத் தாவிச்செல்கிறது. இதனால் இவர்கள் உலகின் மதிப்புக்கும் வியப்புக்கும் உரியவர் ஆகின்றனர்."

"வீட்டுச் சுகங்கள் பாசங்களைத் துறப்பதுவும் தாய்மண்ணின் தியாக வடிவங்களாகி சாவின் தோளிலே தட்டிச் சிரிப்பதும் ஒரு சாதாரண பெண்ணால் முடியாதவை. துணிவு, தியாகம் ஆகியவற்றுடன் தமக்குரிய போர் ஆற்றலையும் இவர்கள் நிரூபித்து நிற்கிறார்கள்" என, இந்நூலின் குரல் தொடர்கிறது.

ஆயினும் இன்று ஏங்கிய குரலிற் பேட்டிகொடுக்கும் சிங்களப் படையினர் சிறிது காலத்திற்கு முன்னர் எண்ணியிருந்தவிதம் வேறு; இதை களம் பல கண்ட ஒரு பெண் தளபதி விளக்குகிறார்:

"'நாங்கள் விரைவில் வருவோம்; உங்களைப் பிடிப்போம்.' - இவ்வாறு பலாலிப் பகுதியில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் எதிர் அணியிலிருந்த சிங்களப் படையினர் எங்கள் 'வோக்கி ரோக்கி' தொடர்புகளை அடிக்கடி குழப்பிக் குரல்கொடுத்துக்கொண்டிருப்பார்கள். இதனை உதாசீனம் செய்தபடி, எங்கள் இலக்கில் கண் வைத்தவர்களாய் நாங்கள் இருந்தோம். இதன்பின் எழுந்த சண்டையில் நாங்கள் விரைந்தோம்; சிங்களப் படையினரைப் பிடித்தோம்."



தலைவருடன் சிறப்புத் தளபதி ஜெனா (வலது), தளபதி விதுசா (இடது).

**"தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி, தமிழீழத்தில் நடைபெறுகின்றது"**

இவ்வகை வளர்ச்சியைக்குறித்தே- "விடுதலைப் புலிகளது மகளிர் படைப்பிரிவின் தோற்றமும், வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று......

தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி, தமிழீழத்தில் நடைபெறுகிறது" என, எம் தேசிய விடுதலைத் தலைவரின் குரல் பெருமிதத்தோடு முழங்கியுள்ளது.

'சுதந்திரப் பறவைகளின்' குரலும் இதனையே அறுதியிட்டுத் தருவதைக் கேட்போம். இது ஐப்பசி, 1993 குரல் -

"இந்திய இராணுவத்துடனான முதலாவது மோதலில், தனது உயிரைத் துச்சமெனக் கருதி, தன் துப்பாக்கியை மட்டும் காப்பாற்றுமாறு கோரி உயிரைவிட்டாள் மாலதி. 10. 10. 1987 ஆகிய அன்றிலிருந்து ஈழத் தமிழ்ப்பெண்களின் புது வரலாறு ஒன்று ஆரம்பமானது. உடலின் ஒரு பகுதியைத்தானும் மீட்டெடுக்க முடியாத அளவுக்கு, இராணுவ டாங்கிகளை எதிர்த்துப் போராடி உடல் சிதைந்த மேஜர் சுகன்யாவுடன் இந்த வரலாறு தொடர்கிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் பெண் போராளிகள் மகத்தான சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இன்று மகளிர் படையணி விரிவடைந்து, ஒரு பெரும் போராட்டச் சக்தியாகப் பலம்பெற்று வளர்ச்சிகண்டுள்ளது."

இதுபோல, "போராளிகளின் குருதிச் சுவடுகள்" எனும் ஏட்டிலிருந்து சில வரிகள் இதோ -

"கடைசியாக அவளை (கப்டன் டோறாவை) நான் பார்த்தபோது, தன் சிநேகிதியின் கரத்தைப் பற்றியவாறு, 'நான் போகிறேன்' என முகமலர்ந்து கூறுகிறாள். அவளது கரத்தை இறுகப் பற்றிக்கொண்ட சிநேகிதி ...... 'எவ்வளவு தூரம் சாதிக்கமுடியுமோ அவ்வளவு சாதி. அப்போது, நீ சாவை அணைத்துக்கொண்டால்கூட நான் கவலைப்பட மாட்டேன். இப்போது நீ போகிறாய், இன்னொரு நாள் உன் பின்னால் நான் வருவேன்' என்கிறாள் - பிரிவு வரப் போகிறது, ஆனால் வெற்றி ஒன்று கிடைக்கப்போகின்றது, என்பதில் உறுதி உடையவளாக."

இன்னொரு காட்சி, கட்டுவனில் 22. 12. 1990-

"அன்று நூற்றுக்கணக்கான சிங்களப் படையினர் அரணைத் தாக்கி முன்னேற முயன்றனர். உக்கிரப் போரை ஒருமணி நேரம் நாம் நடாத்தினோம். தாங்க முடியாது அவர்கள் பின்வாங்கினர். ஆனால்.... போரில் வெற்றிக்கு விலை அதிகமேதான்! இச் சமரில் கப்டன் அஜிதா எதிரியின் ரவையைத் தாங்கி வீரச்சாவையெய்தினார். துணிவுக்கு எம்முன் தனிப் பெயர் பெற்றிருந்த கப்டன் ஆஷா இன்னொரு எறிகணையினாலும் வீரச்சாவெய்தினாள்.

உக்கிர எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டிருந்த செல்வா படுகாயமுற்றாள்; ஆனால் பின்வாங்க மறுத்து நின்றாள். இன்னும் தன் இயல்புக்கு மேலான பங்களிப்பைச்செய்துகொண்டே இருக்கின்றாள்."

இன்னொரு நூல் தரும் பதிவு-

மட்டுநகர் மண்ணில் இந்தியப் படையினர் சூழ்ந்திருந்த வேளையில் - எமது மகளிர் படைப்பிரிவினர் காட்டிலிருந்து நகருடனும் தொடர்பு வைக்கவேண்டியிருந்தது. அப்போது ஒரு சோதனை நிலையத்தில் மக்களோடு மக்களாய் நிற்கிறாள் அனித்தா. இவளைத் தாண்டும் வேளையில் இந்தியருடன் சேர்ந்து நின்ற ஈ. பி. தேசத் துரோகிகள் குழு இவளைச் சந்தேகிக்கிறது. விசாரணைக்கென இத் துரோகிகளுடன் செல்லுமாறு படையினரால் இவள் பணிக்கப்பட்டபோது, புலிகளின் இருப்பிட அசைவுகளையெல்லாம் அறிந்திருந்தகால் அவை எக்கட்டத்திலும் வெளிவராவண்ணம், தன்னோடு வைத்திருந்த 'சயனைட்' குப்பியைக் கடித்து-28.11.1988 அன்று-மட்டுநகரில் வீரச்சாவெய்திய முதற் பெண்ணாகிறாள்.

இவ்வித விறலின் சிகரங்கள் தம்மை ஈவது எதற்காக......?

மேஜர் சோதியா, மகளிர் படையணியின் முதலாவது தளபதி, மகளிர் படைப்பிரிவைத் திறம்பட நடாத்தியதுடன் மருத்துவத்துறை, தொலைத்தொடர்பு எனப் பல பட்டம் தீட்டிய வைரம்.

அஜிதா, ஆஷா, அருந்ததி, சங்கீதா, சாளினி, உஷா, தேனுஜா, கோகிலா, கஸ்தூரி......

என நூற்றுக்கணக்காகியுள்ள அந்தக் காவிய வரிசைகள் இன்றெங்கே?...... எதற்காக .....?

பூநகரிப் போர் உட்பட இதுவரை 507 இன்னுயிர்கள் வீரச்சாவெய்தியுள்ளனர்...... 16 வயதிலிருந்தே இந்த வரலாறு தொடங்குகிறது.

இந்த நினைவிலே எம் நெஞ்சம் ஒரு கணம் தரித்து நிற்கட்டும்.

...மீண்டும், பகைவரைச் சிதற அடித்த பூநகரிப் போருக்கு வருவோம்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பறேசன் தவளை' நடவடிக்கையில் கலந்துகொண்ட, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா அவர்கள் அளித்துள்ள பேட்டியின் வரிகளுட் சில -

"முன்னர் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தாக்குதல்களில் மட்டுமே கலந்துகொண்டது. ஆனால் 'ஒப்பறேசன் தவளை' நடவடிக்கையில் அப்படியல்ல. வேவு பார்த்தது பெண்போராளிகள். பாதை காட்டியது பெண்போராளிகள். பாதையில் கண்ணிவெடிகளைச் செயலிழக்கச் செய்தது பெண் போராளிகள். இவை எல்லாவற்றையும்விட, எமக்குக் கொடுக்கப்பட்ட ஏறத்தாழ இரண்டரை மைல் நீளமான காவலரண்களை அழித்து ஆயுதங்களை அள்ளி, அந்தப் பகுதியை வேறெவரின் துணையுமின்றிக் காவல் செய்ததும் பெண் போராளிகள்தான்."

"இராணுவக் காவலரண்களிலிருந்து புலிகளை நோக்கி ஏவப்பட்டது துப்பாக்கிச் சூடுகள் மட்டுமல்ல. அங்கிருந்து கனரக ஆயுதத் தாக்குதல் நடாத்தப்பட்டது. அத்தனை தாக்குதலுக்கும் மத்தியில் புலிகள் முன்னேறினர். கைப்பற்றிய காவலரண்களிலிருந்து ஆயுதங்களையும் ரவைகளையும் ஷெல்களையும் எடுத்து அடித்தே ஏனைய காவலரண்களையும் கைப்பற்றினர்."

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து நீருந்து விசைப் படகுகளில் முதற் படகை முன்னின்று கைப்பற்றியது லெப். கேணல் பாமாவினது குழுவினரே.

இன்னொரு நெஞ்சை உயிர்ப்பிக்கும் வேறுபாடு - பூநகரிக் களத்தில் காயப்பட்டோரைத் தூக்கிச் செல்வதற்கு பின்னுதவி கிடையாத சூழலே நிலவியது. இந்தப் பின்னுதவியை காயப்பட்டோரும் எதிர்பார்க்கவில்லை. சிலர் விழ, ஏனையோர் முன்சென்றுகொண்டேயிருந்தனர்.

இவ்விதம் முன்னர் எண்ணியிராத தமிழரின் வரலாறு - இதுவரை நடைபெறாத விடுதலைப் போர் - எதிரியின் வலிமையை எதிர்த்தழிக்கும் ஆயுதப் போராக, இன்று ஈழத் தமிழ் மண்ணில் நடைபெறுகிறது.

இதில் மகளிரின் பங்கு இன்று வீறுடன் எழுகிறது. பெண்களைப் பற்றியிருந்த தாழ்வான எண்ணக்கருவையும் புலி வீராங்கனைகள் உடைத்தெறிந்து வருகின்றனர். இவர்களை வரவேற்று வளர்த்துவிட்ட தலைவர் பிரபாகரனும் இதனையே எதிர்பார்த்தார்.

இந்த வளர்ச்சியை, பரிணாமப் புரட்சியை முழுதாக வரலாறு உணர்வதற்கு இன்னும் சில நாட்கள் எடுக்கலாம். ஆனால் பூநகரிப் போர்முனையை உற்று நோக்கினால், உரிய சான்றுகள் ஏற்கெனவே உதித்துள்ள உறுதி புலனாகிறது.

— பெருவழுதி ○

www.eelamview.com

www.eelamview.com





**கப்டன் ராமன்**
*ஏரம்பமூர்த்தி டேவிட்*
*கன்னன்குடா, மட்டக்களப்பு.*
25-03-1974 — 05-01-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கல்முனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

□ □



**லெப். தமிழ்மறவன் (வீரபாண்டியன்)**
*மேகவண்ணன் பூசங்கர்*
*ஒலுமடு, வன்னி.*
27-05-1975 — 24-08-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக ஞானிமட கடற்படை முகாமை வேவுபார்க்கச் சென்ற போது வீரச்சாவு.

□ □



**லெப். மழலேஸ்வரன் (மழலேஸ்)**
*செல்லத்தம்பி விநாயகர்*
*நெடுங்கேணி, முல்லைத்தீவு.*
12-06-1972 — 24-08-1993

வன்னியில் நடாத்தப்பட்ட கோன் கோவேய மினிமுகாம் தகர்ப்பிற்கு சிறப்பாக வேவு பார்த்தமைக்காகத் தலைவரிடம் பரிசு பெற்றவர்.

மண்கிண்டிமலை முகாம் மீதான ('இதயபூமி - 1') தாக்குதலிற்காக சிறப்பாக வேவுபார்த்து, வழிகாட்டியாகவும் செயற்பட்டவர். 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி ஞானிமடப் பகுதிக்கு வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



**லெப். ரட்ணேஸ் (ரட்ணம்)**
*சிறிதர் உமாச்சந்திரன்*
*பிரதான வீதி, மன்னார்.*
07-03-1973 — 17-08-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கல்முனைப் பகுதியிலுள்ள பந்தலடி முகாமில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டபோது வீரச்சாவு.

□ □



**லெப். கெங்காதரன் (கங்கா)**
*கண்ணையா முத்துக்குமார்*
*பாரதிபுரம், மட்டக்களப்பு.*
03-07-1970 — 22-02 1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி பள்ளிக்குடாப் பகுதியை வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.

□ □



**லெப். ரவிக்குமார்**
*சிவகுரு யுவராஜா*
*கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.*
19-09-1970 — 30-05-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி ஞானிமடப்பகுதி வேவுவேலை திறம்படச் செய்தவர். பின்னர் வேவுக்காகச் சென்றபோது மைன்ஸ் வெடித்ததால் குப்பி கடித்து வீரச்சாவு.

□ □



**லெப். பத்மசிலன்**
*அழகையா காந்தரட்ணம்*
*ஏறாவூர், மட்டக்களப்பு.*
09-07 1973 — 15-06-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி ஞானிமடப்பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.

# வெற்றிக்கு வித்திட்ட

பூநகரி வெற்றி, விடுதலைப் போரின் பரிமாணத்தை முற்றிலும் மாற்றியமைத்த வெற்றி.

''தனது பூநகரி முகாமை நாம் தாக்க எண்ணியது எதிரிக்குத் தெரிந்துவிட்டது.''

''எமது எண்ணம் எதிரிக்குத் தெரிந்து விட்டதென்பதும் எமக்குத் தெரியும்.''

''தனக்குத் தெரிந்தது தெரிந்தும், நாம் ஏற்பாடுகளைத் தொடர்ந்ததைக் கண்ட எதிரி, தனது நிலைகளை மேலும் பலப்படுத்திய போதும், நாம் எம் திட்டத்தில் சிறு மாற்றங்கள் செய்தோமே தவிர கைவிட்டுவிடவில்லை.

எல்லாக் கவசமும் அணிந்த ''கோலியாத்'' ஆக பூநகரி முகாம் போர்க்கோலம் பூண்டு நின்ற போதும், இறுமாந்திருந்த அரக்கனும் சிறுவனும் போலான போதும் எம்மைக் ''குறிதவறாத தாவீதாய்'' ஆக்கினர் எம் வேவு வீரர்கள்.

வேவு வீரர்களாகப் பணியாற்ற எல்லோராலும் முடியாது. விடுதலைப் புலிகளிலும் எல்லோராலும் முடியாது. வேவு வீரனின் ஒவ்வொருநாள் வாழ்வும், வாழ்வுக்கும் - சாவுக்கும் இடையேயான போராட்டம்; அந்தப் போராட்டத்தின் ஒவ்வொரு நகர்வும் - ஒவ்வொரு அசைவும் அவனது உயிர் வாழ்விற்கான சாத்தியத்தையும் அசாத்தியத்தையும் மட்டுமல்ல, எம் போராட்டததின் புத்துயிர்ப்பையும், எம் மக்களின் புது வாழ்வையும் தீர்மானிப்பதாய் அமைந்தன.

வேவுப் பணியில் ஈடுபடுபவர்களின் கடமை தனித்துவமான பல பண்புகளைக் கொண்டது. கடும் உழைப்புக்கு ஈடு கொடுக்கக் கூடிய உடல்வலு உள்ளவர்களாகவும், தொடர்ச்சியான - கடுமையான வாழ்க்கை முறைக்கு நின்றுபிடிக்கத்தக்க சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

நிலவில்லாத முழு இரவில், நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் இடங்களை அடையாளம் கண்டு, மைல்க் கணக்கான தூரத்தைப் பாதைகளற்ற, பாதுகாப்பானது எனத் தீர்மானிக்கும் பகுதியால், நடந்து கடக்கவேண்டும்.

குறைந்தளவிலான நேரத்தில், முழு இருட்டில் பார்ப்பவற்றை சரியானபடி விளங்கிக்கொள்ளத்தக்க அவதானிப்புத்திறன் வேண்டும்.

அரைகுறையாகத் தெரிபவற்றை வைத்து முழு முகாம் அமைப்பையும் மதிப்பிடக்கூடியளவிலான இராணுவ அறிவுடன், திட்டமிடலுக்கான ஆலோசனை வழங்கக்கூடியவாறும், திட்டத்தின் பாதகமான அம்சங்களை வெளிப்படுத்தும் அளவிற்குமான இராணுவ வல்லமை வேண்டும்.

இவ்வளவுடனும் இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமெனச் செயற்படும் மனப்பக்குவம் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அடுத்த நாள் வாழ்வுக்கான, அடுத்த மணிநேர வாழ்வுக்கான, அடுத்த கண வாழ்வுக்கான உத்தரவாதம் ஏதுமில்லாது தொடர்ச்சியான மன இறுக்கத்துடனான வாழ்வை, ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு கொள்கைப் பிடிப்புடன், மன உறுதி கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.

என்னதான் கடுமையான வாழ்க்கை எனினும், அதனை இயல்பானதாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவமும், இலட்சியப் பற்றுமதான் அவர்களை இயக்கிக் கொண்டிருந்தன. உயிர்வாழ்வின் கடைசி அத்தியாயத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்த அவர்களின் பேச்சில் தொனிக்கும் நம்பிக்கை மட்டுமல்ல - நகைச்சுவையும் அலாதியானது!

இப்படித்தான் ஒருமுறை எதிரி முகாமின் ஒரு பகுதியில் வேவு வேலையில் ஈடுபட்டிருந்தான் ஒரு போராளி. ஒருபகுதியில் எதிரி கண்டு விட்டு அடிக்கத் தொடங்க, அதில் சுட்டுத்தப்பி வேறொரு பகுதிக்கு ஓடிப்போய்ச்சேர, அங்கும் எதிரிகள் கண்டு சுடத் தொடங்க ..... அவற்றுக்குள்ளால் மீண்டுவந்து அடுத்த நாள் அதைப்பற்றிக் கதைக்குபோது:

'' அப்பா அடிக்கிறார் என்று அம்மாட்டை ஓடினால், அம்மாவும் அடிச்சா எப்படி இருக்கும்? அப்பிடி இருந்தது '' என்றவன், பலதடவை எதிரி முகாமுள்ளே அடிபட்டுத் தப்பி வந்து சேர்ந்தவன், ஒருமுறை வர முடியவில்லை; வரவில்லை.

அவ் வேவு வீரர்களிடம் இருந்த பொறுப்புணர்வு அற்புதமானது. குறிப்பிட்ட இராணுவ நிலை மீதான தாக்குதலைச் செய்வதற்கான அணியினரை அழைத்துச் செல்லும் பொறுப்பு, தெரிந்தெடுத்த ஓரிரு வேவுக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

அதன் பின்னர் அவனது சிந்தனை எல்லாம் குறிப்பிட்ட அணியினரின் வெற்றி, மற்றும் வெற்றிக்கான பாதை திறப்பு என்ற வட்டத்தினுள் வந்துவிடும்.

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காகத்தான் முதன் முதலில் எமது மகளிர் அணியினர் வேவு வேலையில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் அனுபவம்மிக்க ஆண் போராளிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட அவர்கள், ஒரு கட்டத்தில் '' ஏன் நாம் தனித்துச் செயற்படக்கூடாது '' என்று குரலெழுப்பி, ''மௌனமாய்ச் சிரித் தலைவருடன் சண்டை போட்டு தனியான வேவு அணியினராக செயற்பட்டதுடன், தாக்குதலில் ஈடுபட்ட ஆண் போராளி அணிகளுக்கான வழிகாட்டிச் செல்லும் பொறுப்பையும் திறம்படச் செய்தனர்.

'' அந்தப் பிள்ளையள் இல்லை எண்டா அங்கால் பக்கத்தாலை சரியாகக் கஸ்டப்பட்டிருப்பம்'' என்று, அவ்வணியின் தளபதி மனமாரச் சொல்லும் வண்ணம் திறம்படச் செயற்பட்டனர்.

பூநகரிச் சமரில் எமது மகளிர் அணியின் வேவுப் பிரிவினர் நால்வர் வீரச்சாவடைந்தனர்.

சம நேரத்தில் பலமுனைகளில் தாக்குதல் திட்டமிடப்பட்டதால், எல்லா முனைகளிலிருந்தும் ஒரேயடியாக வேவு நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு பகுதியில் அனுபவக் குறைவினாலோ, திறமைக் குறைவினாலோ வேலைகள் அரைகுறையாக இருக்கும்; அல்லது வேலைகளைப் பூரணப்படுத்த வென உள்ளே சென்ற வேவு வீரன் திரும்பி வராமலே மடிந்துவிட்டிருப்பான்.

அந்த வேளையில் தனது வேலையைத் திறமையாக நிறைவு செய்து காத்திருப்பவனிடம் பொறுப்புக் கைமாறும்.

தான் பார்த்த எல்லா நிலைமையையும் புதிதாய் ஒருவனுக்கு ஒவ்வொன்றாய்க் காட்டிவிட்டு, தன புதியபகுதி நோக்கி நடப்பான் அந்தப்புலிவீரன்.

சில அணிகள் ஓரிரு வேவு வழிகாட்டிகளின் வழிகாட்டலிலேயே நீண்டதூர நகர்வினை மேற்கொள்ள வேண்டியிருக்கும்போது தான். அவன் தனது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பிப்பான்.

www.eelamview.com

www.eelamview.com





லெப். இளந்தேவன் (இளங்கோ)
*தர்மலிங்கம் சிறிதரன்*
*பூநகரி, மன்னார்.*
15-07-1970 — 07-09-1993

இவர் 92ஆம் ஆண்டு இடம்பெற்ற சங்குப்பிட்டி -பூநகரி பாதையிலுள்ள 'றவுண்டபோட்' பகுதியிலான தாக்குதலுக்காக சிறப்பாக வேவுபார்த்தவர். 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரியின் பல பகுதிகளையும் திறமையாக வேவு பார்த்தவர். பூநகரி முகாமினுள் ஊடுருவி வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்போது வீரச்சாவு.



லெப். செல்வன் (ஆனந்தன்)
*முருகேசபிள்ளை சரவணபவன்*
*கலட்டி, யாழ். (காரைநகர்)*
29-09-1975 — 09-09-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி வாடியடிச் சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கித் தாக்குதலில் வீரச்சாவு.

□ □



கப்டன் கதிரவன் (றொகான்)
*வீரப்பு சந்திரன்*
*சேமமடு, வவுனியா.*
31-07-1973 — 10-09-1993

லெப். கேணல் சுபன் தலைமையிலான பள்ளிக்குடாப் பகுதி 62 காவலரண்களின் தகர்ப்பில் சிறப்பாக வேவு பார்த்தமைக்காக, தலைவரிடம் பரிசு பெற்றவர். 'இதயபூமி - 1' (மண்கிண்டிமலை) நடவடிக்கைக்காக மிகவும் திறமையாக வேவு பார்த்து, வெற்றிக்காகப் பெரும் பங்காற்றியவர். 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது வீரச்சாவு.



2ஆம் லெப். பனம்பாரன்
*தங்கராசா சதீஸ்வரன்*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
20-04-1976 — 09-09-1993

மண்கிண்டிமலை மீதான (இதயபூமி - 1) தாக்குதலுக்காக வேவு பார்த்தவர். 'ஒப்பரேசன்] தவளை' நடவடிக்கைக்காக பூநகரி வாடியடிச் சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்தடாங்கித்தாக்குதலில் வீரச்சாவு.

□ □



லெப். சிவம்
*சின்னையா கமலேஸ்வரன்*
*கோப்பாய், யாழ். (வளலாய்)*
17-05-1969 — 09-09-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி வாடியடிச் சந்தியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, எதிரியின் யுத்த டாங்கித் தாக்குதலில் வீரச்சாவு.

□ □



கப்டன் ஆராவமுதன் (நிரேஸ்)
*குலவீரசிங்கம் தேவபாலன்*
*மீசாலை, யாழ்ப்பாணம்.*
16-09-1972 — 23-09-1993

வளலாய் இராணுவ வேலியைத் தாக்கியழித்தமைக்கான வேவு, மாதகலில் இடம்பெற்ற பதுங்கித்தாக்குதலுக்கான வேவு. 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி முகாமை வேவு பார்த்துவிட்டுத் திரும்புகையில், சங்குப்பிட்டி - கேரதீவு கடலில் வீரச்சாவு.

□ □



கப்டன் அருளரசன்
*கணேசன் கருணாநிதி*
*களுதாவளை, மட்டக்களப்பு.*
10-09-1974 — 13-10-1993

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பள்ளிக்குடா முகாமையும், கடற்கரைப் பகுதியையும் சிறப்பாக வேவு பார்த்துப் பூரணப்படுத்தியவர். பள்ளிக்குடாப் பகுதிக்குள் வேவுக்காக ஊடுருவிச் செல்லும்போது வீரச்சாவு.

# வேங்கைகள்

வேவு வீரன் ஒருவனுக்கு மைன்ஸ் வெடித்து கால் இல்லையென்றால்? என்ற கேள்விக்கு, "துண்டுபட்ட காலை இறுக்கிக் கட்டிவிட்டு என்னைத் தூக்கினால் நான் காட்டிச் செல்வேன்' என உறுதியாகப் பதிலளித்தனர் எமது வேவு வீரர்கள்.

மிகக் குறைந்த ஓய்வுடன் தொடர்ச்சியான பணியில் ஈடுபடும் வாழ்வில், தொடர்ந்து பல நாட்களுக்கு நல்ல உணவோ ஆறுதலான தூக்கமோ அவர்களுக்கு வாய்ப்பதில்லை.

* * *

கையையும், காலையும் எறிந்துவிட்டு அவர்கள் படுத்திருப்பதைப் பார்த்தால் பாவமாய்த்தான் இருக்கும்!

இராத்திரி வேலை முடிந்து திரும்பி வந்து, 'மைப்'வேலை எல்லாம் முடிந்து படுக்க நேரம் எப்படியும் பத்துப் பதினொரு மணியாகிப் போயிருக்கும்.

எழுப்பத்தான் வேண்டும், இப்ப எழுப்பினாத்தான் நேரம் சரியா வரும். எழும்பி எல்லா வேலையும் முடிந்து முதல் பார்த்ததில் உள்ள சந்தேகங்கள் எவை எனவும், புதிதாய் பார்க்க வேண்டியவை எவை எனவும் கேட்டு முடித்துவிட்டுப் புறப்படும்போது, அநேகமாய்ச் சூரியன் பூநகரிக்குப் பின்னால் மண்டைதீவுக்குள்ளே மறைந்து கொண்டிருப்பான்.

மெதுவாகச் சத்தமின்றி நகர வேண்டும். நிலையாய் நிற்பதற்கும் நகர்வதற்கும் இடையே வித்தியாசம் காணமுடியாதபடியான மெதுவான நகர்வு; சிறுதவறும் அவனையும் தோழர்களையும் ஆபத்துக்குள்ளாக்கும், அழித்துவிடும்.

முகாமின் வெளிக் காவலரண் வேலியை ஊடறுத்துச் செல்வதென்பது மிகவும் கடினமான பணி. ஒன்றன்பின் ஒன்றாக முட்கம்பிச் சுருள்களும் - நிலத்தின் மேல் அரையடி உயரமாய் முட்கம்பி வலைப் பின்னலும்; காலை வைத்தால் எடுக்க முடியாது.

இதைவிட ஒவ்வொரு அடி வைக்கும்போதும் - அந்த இடமும் கண்ணிவெடியாய் இருக்கலாம் - படுத்திருந்து அங்குலம் அங்குலமாகக் கண்ணிவெடியைப் பரீட்சித்தபடி நகர வேண்டும்.

இராணுவ முகாமைச் சுற்றிய எல்லாப் பகுதியும் கண்ணிவெடிகளால் சூழப்பட்டிருக்குமென்பது சாதாரண விடயம்தான். ஆனால் நிலவில்லாத முழு இரவில், சத்தம் ஏதும் இன்றி இரகசியமாய், கண்ணிகளின் ஊடே ஊர்ந்து செல்வது என்பது, அதுவும் இயந்திரத் துப்பாக்கியுடனும், பளீரென மின்னும் ஒளி விளக்குடனும் காத்திருக்கும் எதிரிக்கு முன்னே நகர்ந்து செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

படுத்திருந்து மெதுமெதுவாய் கையால் தொட்டுணர்ந்து, கண்ணிவெடி என நினைத்தெடுப்பது கல்லாய் இருக்கும்; கல்லென நினைத்து கவனமின்றி எடுக்க அது கண்ணியாய் இருந்து தொலைக்கும்.

வேவு வீரர்களுக்கு கண்ணிவெடி வெடிப்பது காலில் மட்டுமல்ல.

இப்படித்தான் ஒருமுறை கம்பிச் சுருள்களுக்கிடையில் எதிரியின் மைன்ஸ் ஒன்று வெடிக்கிறது. வெளிச்சத்தில் தேடிய எதிரி முன்னேற முற்பட்டபோது, அழைத்துச் சென்ற பெண் போராளியை பத்திரமாய் அனுப்பிவிட்டு, குப்பி கடித்தான் ஒரு போராளி.

இருளின் கவசத்தில் நகரும் புலியின் முன்னே, எதிரி. ரவையை மழைபோல் பொழியத் தயாரான இயந்திரத் துப்பாக்கியுடன்...... பளீரெனக் கண்களைப் பறிக்கும் ஒளியைப் பாய்ச்சித் தேடுவான்.

எதிரியின் ஒவ்வொரு காவலரணிலும் பிரகாசமான சிறு சிறு, 'லைற்'கள் இருந்தபோதும், முழு முகாமையும் சுற்றி இடையிடையே பெரியதும் பிரகாசமானதுமான லைற்களால் அடிக்கடி சுற்றி சல்லடை போட்டுத் தேடி அவதானிப்பான் எதிரி. அவற்றைவிடத் தனியாக 'ஓரிடத்தில் இருந்து மறு இடத்திற்கு' நகர்ந்துகொண்டிருக்கும் 'சுத்துச் சென்றிக்காரன்' தனது பங்குக்கும் எல்லா லைற்களாலும் தேடியபடி போவான்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாகதேவன் துறையில் ஒன்றும், ஆலடிச்சந்தியில் மற்றதுமாய், "பெரிய அரக்கனின் சூரியக் கண்கள் போல்" சுழலும் இரண்டு பெரும் தேடொளிகள்.

யாழ். குடாவின் மற்றக் கரையில் இரவுப் பயிற்சியில் கள்ளமடிக்கும் பெடியளை றெயினிங் மாஸ்ரரிடம் பிடித்துக் கொடுக்க வல்ல பிரகாசமான- அந்தச் சூரியக் கண்கள் திறக்கும்போது, அங்குள்ள முழு நிலமும் பகலாகும்.

இருளின் கவசம் அகன்று பறக்கும்.

ஒரு சாதகமான பாதையைக் கண்டுபிடிக்க வாரக்கணக்காகப் போராடவேண்டும். நகரும் பாதையில் மனித நடமாட்டத்திற்கான எந்தத் தடயத்தையும் விட்டுவிடக்கூடாது. வாரக் கணக்கில் போராடிக் கண்டுபிடித்த பாதையில் ஒரு சிறு தடயத்தை விட்டாலும் எதிரி உஷாராகிவிடுவான்; அந்தப் பாதை அடைபட்டுவிடும். அங்கே ஒரு எல். எம். ஜீயோ ஜீ. பி. எம். ஜீயோ புதிதாக முளைத்துவிடும்.

கும்மென்ற இருட்டில், அவர்களுக்கு மட்டும் தெரிந்த குறிப்புகளைப் பார்த்து, மணிக்கணக்காக நடக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரியத்தக்க எந்த அடையாளத்தையும் வைக்காது, மரத்தையும், மண்ணையும் புல்லையும் அடையாளப்படுத்தி நடக்க அதீதத் திறமைவேண்டும்.

எதிரி எங்கும் நிற்கலாம் - இரவின் முழு இருட்டை ஊடறுத்து நகர்பவனைக் காட்டும் 'நைற் விசன்' என்னும் இரவுப் பார்வைச் சாதனங்களுடன். ஆங்காங்கே சிறு குழுவாக எம்மவரை எதிர்கொண்டு காத்திருப்பான் - எதிரி.

இருட்டுக் கவசத்தில் செல்லும் புலிவீரரை நோக்கி எதிரியின் துப்பாக்கி அதிரும்.

எதிர்பாராத வேளையில், எதிர்பாராத திசையிலிருந்து ரவை மழையாய்ப் பொழியும்; படுத்திருந்த அரக்கன் எழுந்துவிட்டது போல் தூங்கிக் கிடந்த எதிரி முகாம் உயிர் பெறும்.

எல்லாப் பொயின்ற்றுகளிலிருந்தும் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்கும் போது,ஆள் இல்லையென நினைத்திருந்த பொயின்ற்றில் இருந்தும் எல். எம். ஜி. சடசடக்கும்.

"நல்லவேளை டம்மிப்பொயின்ற் என்று - குறாப்பை கொண்டு போயிருந்தா, நல்ல குடுவை குடுத்திருப்பான்" என நினைத்தபடி ஓடிக்கொண்டிருக்கையில்,பராலைற் வெளிச்சம் போதாதென்று போகஸ் லைற்றும் அடிக்கத் தொடங்கியிருப்பான்.

க்கியூ, க்கியூ என்று தலைக்கு மேலாலும், பக்கத்தாலும் காற்றைக் கிழித்துச் செல்லும் ரவைகளுக்கிடையே ஓடிவந்து பார்த்தால், சகதோழனைக் காணவில்லை.

பயிற்சி முகாமில் கண்டது முதல் இன்றுவரை - இதோ இப்போது வரை - ஒன்றாய் வாழ்ந்த நண்பன், ஒரு கோப்பையில் உண்டு, பாயில்லாமல் ஒரு பற்றையில் உறங்கி ஒன்றாய் வாழ்ந்த நண்பனைக் காணவில்லை......

►

www.eelamview.com

www.eelamview.com





**லெப். செங்கண்ணன்**
**(சத்தியராஜ்)**
*முருகேசு திராவிடமுத்து*
*15ஆம் கிராமம், அம்பாறை.*
*09-11-1973 — 24-10-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.*



**லெப். நிலவேந்தன்**
**(நடேஸ்வரன்)**
*சுப்பிரமணியம் கண்ணன்*
*புலோலி, யாழ்ப்பாணம்.*
*26-05-1974 — 11-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக ஞானிமடம் முன்னணிக் காவலரண்களை வேவு பார்த்ததுடன், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகச் செயற்பட்டவர்.*



**கப்டன் நிரஞ்சன்**
*பாபு இராஜசிங்கம்*
*வற்றாப்பளை, முல்லைத்தீவு.*
*25-07-1972 — 12-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக கறுக்காய்ப் பகுதியிலும் நாகதேவன்துறையிலும் வேவு நடவடிக்கையிலும், தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*



**கப்டன் துளசிராம்**
*சின்னமணி தாமரைச்செல்வி*
*கிளிநொச்சி. (பருத்தித்துறை)*
*17-08-1974 — 11-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி முன்னணி காவலரண் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், ஆண்களின் தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்களில் இவரும் ஒருவர்.*



**லெப். திண்ணியன் (ரங்கா)**
*கணபதிப்பிள்ளை கருணாநிதி*
*களுவாஞ்சிக்குடி, மட்டு.*
*13-08-1971 — 24-10-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.*



**லெப். நித்தி**
*துரைராஜசிங்கம் சுந்தரேஸ்வரன்*
*25-02-1975 — 30-10-1993*

*மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான இதயபூமி - 1 நடவடிக்கைக்கான வேவு. பூநகரி கௌதாரிமுனைப் பகுதி இராணுவ முகாம் வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது வீரச்சாவு.*



**கப்டன் குருவேல்**
*சற்குருதாசன் செல்வநேசன்*
*பரியாரிகண்டல், மன்னார்.*
*16-12-1970 — 11-11-1993*

*பூநகரிப் பகுதியில் ஊடுருவி கேணல் சித்திரப் புஞ்சிகேவா மீது நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலுக்காக, தலைவரிடம் பரிசு பெற்றவர். கேணல் சுபன் தலைமையில் நடாத்தப்பட்ட பள்ளிக்குடா காவலரண்கள் 62 மீதான தாக்குதலுக்கு வேவு. 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி வில்லடி கட்டளை முகாம்மீதான வேவுடன் வழிகாட்டியாகவும் சென்றவர்.*

இது எம் நிலந்தான். ஆனால், எதிரி முகாமின் உள்ளேயே ..... ''உனக்கு காயம்பட்டு விட்டதா ? எங்கேயடா நிக்கிறாயென் தோழனே .... '' என்று குரல் வைத்துக் கூப்பிட முடியாது, காத்திருந்து பார்த்திருக்கும் வேளை கொடுமையானது.

இன்னொரு வேளை ''நீங்கள் இதில் நில்லுங்கள்; நான் உள்ளே போய் கிளியர் பண்ணிக் கூப்பிடுகிறேன்'' என்று சொல்லிப் போவான் ஒரு தோழன்.

மரத்துடன் மரமாய், பற்றையுடன் பற்றையாய், புல்லுடன் புல்லாய், நிலத்துடன் நிலமாய், நீருடன் நீராகக் கலந்து மணிக்கணக்காக, நாட்கணக்காக - காத்திருந்து பார்த்திருந்து மீளும் வேவு வீரனை எண்ணித் தோழர்கள் காத்திருப்பர் - வெளியே.

'என்ன இன்னும் காணவில்லை' என நினைததிருக்கும் வேளை, உள்ளே போனவன் வந்ததும் உண்டு; வராமலே விட்டதும் உண்டு.

தனிமையில் தன்னையும், கையில் உள்ள ஆயுதத்தையும், கழுத்தில் உள்ள குப்பியையும் நம்பி ஆயிரம் பகைவன் உள்ள எதிரிப் பாசறைக்குள் தன்னந் தனியாய் நுழையும் வேவு வீரனின் எண்ணங்கள், எங்கெங்கோ ஓடும். நீரில் மூழ்கி, மழையில் தோய்ந்து, ஈரத்தில் ஊறி எல்லாம் ஈரமாய் நடக்கும் வேளை, அரப்புவைத்து முழுகவிட்டு, ஈரம் துடைத்து, தலைக்குப் பவுடரும் போட்டுத் தேய்த்துக் காயவிட்டு ''சாப்பிடடா மோனை'' என்று கொஞ்சும் அம்மா ..... நினைவுக்கு வராமலா போவாள்!

உடலெல்லாம் நுளம்பு மொய்த்து கண், காது, மூக்கு என எங்கும் கடித்துத்தின்ன, கலைக்கவும் மாட்டாது குளிரில் நடுநடுங்கி, வாடும்வேளை, சும்மா படுத்ததைக் கண்டு போர்வையால் மெல்லப் போர்த்து அன்பாய்த் தடவிப் போகும் அப்பா...... நினைவுக்கு வராமலா போவார்?

அதற்கும் மேலாய், எல்லாவற்றிற்கும் மேலாய் இது எங்களின் நாடு, எம்மக்களின் பூமி என்ற நினைவு மேலோங்கும்.

கடுமையான பயிற்சியும், கடினமான முயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை என அடிக்கடி உரைக்கும் தலைவனின் நினைவும் மேலோங்கும்.

'' நீ இதில் நில், நான் உள்ளே போகிறேன்; வெடிச்சத்தம் கேட்டால் நீ திரும்பிப் போ - நான் வருவேன்'' என்று கூறிவிட்டுச் சென்று, வராமலே போய்விட்ட உயிர்த்தோழன் நினைவுக்கு வருவான்.

மெல்ல நகர்கையில் தடக்கி விழுத்திய வயலின் வரம்பு, 'இப்ப முதல் உழவு உழுதிருக்க வேணும்......' என்ற நினைப்பில் அவனை ஆழ்த்தும்.

சுதந்திரமாய் நீந்திக் குளித்த குளமும், ஏறிக் குதித்த மாமரமும் இன்று பகைவனின் பாசறையாய் ஆனதை எண்ணி நெஞ்சு கனக்கும்.

* * *

எங்களது தாய் மண்ணைப் போலவே அழகான யாழ்ப்பாணக் கடலேரி! அழகான அந்தக் கடலேரியின் உள்ளேதான் எத்தனை கொடுமையும, துயரமும?

நேரம் நீண்டு செல்லும். தண்ணீரில் நடந்தும், மிதந்தும், வலித்தும் செல்லும் வேவு வீரனின் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றும்.

கத்தியுடன் வந்த பகைவனைப் பார்த்துக் கும்பிட்ட அந்த அம்மா ''என் அம்மாவைப் போலொரு அம்மா'' - வெட்டுண்ட தலையுடன் இந்தத் தண்ணீரில் தானே மிதந்தாள்?

முத்தமிட்டு 'டாட்டா' காட்டிய சின்னவள் சொன்ன பொம்மையுடன் வந்த அப்பா - ''என் அப்பாவைப் போலொரு அப்பா' - இந்தத் தண்ணீரில்தானே மிதந்தார்? ''அப்பா எப்ப பொம்மையுடன் வருவார்?'' என்ற பிள்ளையுடன் அம்மா கண்ணீரில் குளித்திருந்த போது, அப்பா இந்தத் தண்ணீரில்தானே கரைந்தார்?

எங்களது சொந்தங்களும் உறவுகளும் கலந்து கரைந்த உப்புநீர், எம்மக்களின் குருதி கலந்த நீர்; குருதியுடன் உயிரும் கலந்த நீர். எம் மக்களின் குருதியும் உயிரும் கலந்ததாலோ அந்தத் தண்ணீரில் நனைகையில் புதிய உணர்வு பிறக்கிறது!

''மேனியைத் தழுவும் தண்ணீரைத் தடவி, வாயில எடுத்து மெதுவாய் உமிழும் போது...... உப்புக் கரிக்காது.''

யாழ். நீரேரிக்கும் எம் வேவு வீரர்களுக்கும் இடையேயான உறவு ஆழமானது. அன்பு கொள்வதும் கோபப்படுவதுமாய் அவர்களின் நட்பில் பல கதைகள்.......

மாலை மென்னிருட்டில், தூரத்தே தெரியும் வெளிச்சத்தைப் பார்த்தபடி இடுப்பளவு தண்ணீரில் நடக்கத் தொடங்கும்போது, அந்தக் கடல் மகள்...... எங்கள் யாழ்ப்பாண நீர்நங்கை அற்புதமான அழகிதான்!

கூட்டமாய்த் துள்ளும் திரளியும், வரிசையாய்ப் பறக்கும் கொக்குகளுமாய் அழகை ரசித்தபடி நடக்கையில், வழிமாறி வந்த பெரிய மீன் ஒன்று காலில் இடற, என்னவோ ஏதோவென்று பாய்ந்து விழுபவனை எல்லோருமாய்ச் சேர்ந்து தாட்டு மிதத்தி......

'றெக்கி' வேலை முடிந்து பசியும் களைப்புமாய் உடல் சோர்ந்து, அதிகாலையில் பிறை நிலவைப் பார்த்தபடி திரும்புகையில், அவன் பேசாமல்தான் வருவான்.

என்னில் என்ன கோபமோ என்று, கடல் மகள் மெல்லக் குமுறி ஆர்ப்பரிக்க, இடுப்பளவாய் இருந்த நீர்மட்டம் மேலேறி, மேலே மேலே ஏறி, நுனிக்காலுக்கும் எட்டாத் தண்ணீராய் மேலெழுந்து நிற்கையில், கடல் மகளின் காதல் போய் எம்வீரர் தத்தளிக்கத் தொடங்குவர்.

முகாம் வேவுப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துகொண்டு திரும்பி வந்த எம் வேவு அணியினர், கடலில் தம் தோழனை இழந்து சோகத்துடன், கடல் மகள் மேல் கோபத்துடன் மீண்டதும் உண்டு.

பௌர்ணமியும் அமாவாசையும், நிலவின் உதயமும் மறைவும் கடல் நீரேரியில் நிகழ்த்தும் மாற்றம் அற்புதமானது.

நிலவின் உதயத்தில் அமைதியாய் இருக்கும் கடலேரி. நேரம் செல்லச் செல்ல, பெருங்கடலில் இருந்து மெதுவாக உள்ளே வரத் தொடங்கும் நீரோட்டம்.

ஆளை இழுக்கும் வேகம் பெற்று - உச்சவேகம பெற்று, நீர்மட்டம் உயர்ந்து மெதுவாய்த் தணியும்.

பின்னர் நிலவு மறையத் தொடங்க கொஞ்சம் கொஞ்சமாய் கடலுக்குத் திரும்பும் தண்ணீர் வேகம் பெற்று, உச்ச வேகம் பெற்றுத் தணிந்து, நிலவின் அடுத்த உதயத்தைப் பார்த்துத் தணிந்திருக்கும் நீரோட்டம்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையேயான ஈர்ப்பு விசையானது, நீர்மட்டத்திலும், நீரோட்டத்திலும் ஏற்படுத்தும் ஜாலத்தைத் துல்லியமாய் ரசிக்கலாம் யாழ். கடலேரியில்.

இந் நீரேரி புலிவீரர்களுடன் மட்டுமல்ல, எம் தாயகத்தின் நிலத்துடன் மட்டுமல்ல, எம்மினத்தின் நீண்ட வரலாற்றுடனும் பின்னிப் பிணைந்தது.

நீண்ட வரலாற்றின் பல்வேறு காலங்களில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டது எமது மண். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆக்கிரமித்ததும், பின்னர் அதிகார மாற்றம் ஏற்பட்டு ஈழத்தமிழர் சிங்களவர்களின் அடிமைகளாய் கைமாற்றமானதும், தொடர்ந்தும் தமிழர்கள் அடிமைகளாய் இருக்க மறுத்துப் போராடியதால் சிங்களவர்கள் தமது அதிகாரத்தை இந்தியர்களிடம் கைமாற்றிக் கொடுத்ததும், இந்தியர் சிங்களவர்களிடமே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டுப் போய்ச் சேர்ந்ததும் என, தமிழீழ மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நீண்ட பெரும் தொடர்வரலாறு.

போர்த்துக்கீசர் கையில் யாழ்ப்பாணமும், ஒல்லாந்தர் கையில் கொழும்புடன் பிறபகுதிகளுமாகப் பீடிபட்டிருந்ததாம். போர்த்துக்கீசர் கையிலிருந்த யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வந்து மன்னாரில் தரித்திருந்த ஒல்லாந்துப்படை, அடம்பன் வழியாகப் பூநகரி வந்து, பூநகரியில் இருந்து இந்த 'யாழ்

www.eelamview.com

www.eelamview.com





**லெப். மகிழினி**

*அருள்வாசகம் சகாயபாமா*
*செபஸ்தியார் கோவிலடி, யாழ்.*
*30-04-1974 — 11-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக வில்லடி முகாம் முன்னணிக்காவலரண் பகுதியில் வேவுப் பணியில் ஈடுபட்டதுடன், தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*



**லெப். மணி (மைனா)**

*செல்லையா வசந்தி*
*புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.*
*09-10-1976 — 11-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி வில்லடிமுன்னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*



**லெப். இளவரசி**

*செல்லையா கலாநிதி*
*ஜெயந்திநகர், கிளிநொச்சி.*
*24-08-1968 — 11-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரிவில்லடி முன்னணிக் காவலரண்கள் மீதான வேவிலும், தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*

□ □



**லெப். அழகநம்பி (றோமியோ)**

*கந்தசாமி செந்தில்நாதன்*
*கொக்குவில், யாழ்.*
*17-09-1976 — 13-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக ஞானிமடம் பகுதியில் வேவு பார்த்ததுடன், தாக்குதல் உதவி அணிக்கான வழிகாட்டியாகச் செயற்பட்டவர்.*

□ □

நீரேரி'யூடாகச் சாவகச்சேரி வந்து, பின்பக்கத்தால் போர்த்துக்கீசரை மோதி அழித்து, யாழ்ப்பாணத்தைப் பிடித்து, தமிழர் மீதான அடிமைக் கைமாற்றம் நிகழ்ந்ததாம்.

எம்மை அடிமைகொள்ள வந்த அந்நியப்படை நடந்த அதே நீரேரியில், எம்மக்களை விடுவிக்க இன்று எம் வேவு வீரர்கள் நடக்கிறார்கள்.

எம்மை அடிமைகொள்ள வந்த பகைவன் நடந்த பாதையில், எம் நாடு எமக்கே சொந்தம் என்ற இறுமாப்புடன் எம் வீரர்கள் நடப்பது கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக்கிறாள்.

அன்று பகைவனைப் பார்த்து அஞ்சி ஒடுங்கி, அழுது நடுநடுங்கி வாழ்ந்த எம் பெண்டிரின் பேத்தியின் பேத்திகள், இன்று நிமிர்ந்த நெஞ்சுடன் வேவுப் புலி வீரராய்ப் பகைவனைத் தேடிப் புறப்படும் காட்சி கண்டு, யாழ். நீர்நங்கை சிரிக்கிறாளோ!

அந்த யாழ். நீர் நங்கை எல்லாம் அறிந்தவள். பகைவனின் கரையில் ஏறிய புலிகளில் எதிரியின் துப்பாக்கி தீ உமிழ்ந்ததும், பக்கம் ஒருவராய் நீரில் வீழ்ந்து சரிந்த எம் வீரரில் ஒருவனுடல் பகைவன் கையில் வீழ்ந்ததும்.

''அது எது'' வென நெருங்கிய எம் மீனவர். ''ஐயோ எம்பிள்ளை'' எனத் துடித்துத் தூக்கியதும் இந்தக் கடல்மகள் அறிவாள்.

தூரத்தே எதிரி சுடும் சத்தம் கேட்டு, அது எதற்கோ .....? எம் மவரைக் கண்டு சுட்டானோ..... ? போன எம் தோழன் வீழ்ந்துவிட்டானோ..... ? எனக் கலங்கிக் காத்திருந்து, காலைவரை காத்திருந்து ......

மிதந்து வந்த தோழனை அள்ளி எடுத்தழுததும், மீண்டு வந்த தோழனை அணைத்து ஆடி மகிழ்ந்ததும், இந்தக் கடல்மகள் அறிவாள்.

வெற்றிலைக்கேணி, வளலாய், மண்கிண்டிமலை, பூநகரி என எம் ஒவ்வொரு வெற்றிக்கும் வித்திட்டவர்கள் எம் வேவு வீரர்கள்.

எம் தாயகத்தைச் சிதைத்தழிப்போம் எனச் சபதமிட்டு, யாழ் நகரைப் பிடிக்கவெனத் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்த வட பகுதியின் படைத்துறைத் தலைமையை, அராலியில் வைத்து அழித்தொழித்தவர்கள் எம் வேவு வீரர்களே.

குறிப்பாக தமிழீழ நாட்டின் பெருவெற்றியாய் அமைந்த 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையில் வேவு வீரர்களின் பங்கு மகத்தானது.

வெற்றிலைக்கேணி வெற்றிக்கு வித்திட்ட சிவாஜி,

மண்கிண்டிமலையின் வரலாற்றுக்கு வழிகாட்டிய றொகான், ரமணன், பனம்பாரன்,

பதவியா கொங்கேவேயவின் வெற்றிச்சிற்பிகள் மழலேஸ், நித்தி,

பூநகரி கேணல் மீதான கண்ணிவெடிக்கு தர்மேந்திராவுடன் கண்ணிவெடி சுமந்த குருவேல் என்று, பூநகரி வெற்றியில் வித்தான வேங்கைகள் பற்பலர்.

அவர்களது முயற்சியால், அர்ப்பணிப்பால் இன்று எம் தாயகம் வெற்றிக்களிப்பில் மிதக்கிறது.

வீழ்ந்த வேங்கைகளின் தோழர்கள் தம்புதிய இலக்குகளை நோக்கி, அதே இருளின் கவசத்தில், அதே தேடொளிக்கு மறைந்து நகர்கிறார்கள். இலக்கு புதியது, கையில் உள்ள ஆயுதம் புதியது, அவர்களது அனுபவமும் புதியது.

ஆனால் நினைவில் மட்டும் அவர்களது அதே தோழர்களும், அதே இலட்சியமும்தான்!

— பொட்டு ○



**லெப். செய்யவன் (நேரு)**

*கணபதிப்பிள்ளை தங்கருபன்*
*பெரியபளை, யாழ்ப்பாணம்.*
*13-11-1993*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி முகாம் வேவு நடவடிக்கையிலும்,தாக்குதல் அணிக்கான வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*

□ □



**லெப். ரமணன்**

*சிவஞானம் சிவபாலன்*
*பன்னாலை, யாழ்.*
*01-04-1975 — 13-11-1993*

*மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பிற்கான (இதயபூமி-1) வேவு நடவடிக்கையில் ஈடுபட்டவர். 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்கான வேவு நடவடிக்கையில் ஈடுபட்டு, தாக்குதல் அணிக்கு வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.*

□ □



**மேஜர் செம்பியன் (சிவாஜி)**

*சின்னத்தம்பி குமாரலிங்கம்*
*அகதிமுகாம், செம்பியன்பற்று,யாழ்.*
*25-02-1974 — 13-11-1993*

*கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பிற்கான வேவிற்காக, தலைவரிடம் சிறப்புப்பரிசு பெற்றவர். வளலாய்ப் பகுதியில் இராணுவ வேலியைத் தாக்கி அழித்தமைக்கான வேவு. 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி பள்ளிக்குடாப் பகுதிவேவு,பின்னர் வில்லடி பிரதான கட்டளை முகாம்மீதான வேவுடன் பிரதான வழிகாட்டியாகச் சென்றவர்.*



**கப்டன் முகுந்தன் (கிருமானி)**

*பிரான்சிஸ் றொபேட் வின்சன்*
*குருநகர், யாழ்ப்பாணம்.*
*29-08-1973 — 30-11-1992*

*'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காக பூநகரி கல்முனைப் பகுதியை வேவு பார்த்துவிட்டுத் திரும்பும்போது வீரச்சாவு.*

**"கெரில்லாப் போர்முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்திவந்த நாம், இன்று பாரிய படைத்தளங்களைத் தாக்கி அழிக்கும் சக்தி பெற்றவர்களாக வளர்ச்சி கண்டுள்ளோம். இந்த அபாரமான முன்னேற்றத்திற்கு வேவுப்பிரிவினரின் பங்கு முக்கியமானது. மிகவும் கஷ்டமானதும், மிகவும் சாதுரியமானதும், மிகவும் ஆபத்து நிறைந்ததுமான வேவுப் பணியில் ஈடுபடும போராளிகள் தரும் தகவல்களைக்கொண்டே தாக்குதல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன; தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்த முடிகின்றது. வேவு வீரர்களின் துணிகர சாதனைகள்மூலமே, நாம் பூநகரியில் பெரும் சமர் புரிந்து வெற்றியீட்ட முடிந்தது.**

**வேவுப்பணியில் ஈடுபடும் போராளிகளின் ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து நிறைந்தது; உயிருக்கு உத்தரவாதமில்லாதது. இந்தப் பணியின்போது எத்தனையோ அற்புதமான போராளிகளை நாம் பறிகொடுத்துவிட்டோம். இந்த அர்ப்பணிப்புகளின் பயனாகவே நாம் போர்முனைகளில் பெரும் வெற்றிகளை ஈட்டிக்கொள்ளமுடிகின்றது."**

— தலைவர்

www.eelamview.com

www.eelamview.com



# சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள்

## கடற் கரும்புலி மேஜர் கணேஸ்

**காலில்லாமல் போனமைக்காக அவன் அழுதான் ; போராட்டத்தில் காலை இழந்துபோனமைக்காக அல்ல. அருகில் நின்ற தோழனின் கைகளைப் பற்றி விம்மினான், "இனிஎப்பிடியடாநான் சண்டைக்குப் போறது?"**

கிளாலிக் கடலின் அலைகள் நனைத்துச் செல்லும் கால்களில், குருதிக் கறை பிசுபிசுத்த ஒவ்வொரு காலையின்போதும் -

பிணவாடையைக் காவிவரும் கடற்காற்றின், ஒவ்வொரு வீச்சின் போதும் -

அவர்களுக்குள் இனம்புரியாத ஒரு ஆவேசம் கொதித்து எழும்.

கிளாலிக் களத்தில் தளபதி சாள்ஸ் வீழ்ந்த போது, அது அவர்களுக்குத் தாங்கமுடியாத பேரிழப்பாக ஆகிவிட்டது.

எல்லாவற்றுக்குமாகச் சேர்த்துப் பதிலடி கொடுக்க அவர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்.

வரதனுக்கும் மதனுக்கும் முந்திய அந்த 60 நாட்கள் -

அவர்கள் சக்கை வண்டிகளோடு பகைவனைத் துரத்துவதும், அவன் சண்டை பிடிக்காமலே தப்பி ஓடிவிடுவதும், பின்னர் ஏமாற்றத்தோடு இவர்கள் திரும்பிச் செல்வதுமாகக் கழிந்த அந்த இரவுகளில் -

அவர்களில் ஒருவருக்காக தன்னை அனுப்பிப் பார்க்குமாறு நச்சரித்துக்கொண்டிருப்பான் கணேஸ்.

'டோரா' வை நொருக்குவதற்கான தாக்குதலின் திட்டம் தயாரிக்கப்பட்டபோது -

அந்தச் சாதனையின் சாதனையாளர்களுள் ஒருவனாகத் தான் போகவேண்டுமென்ற ஆதங்கம் அவனுக்கு.

பருத்தித்துறைக் கடலில் புவீந்திரனும், மணியரசனும் 15 நாட்களுக்கு மேல் காத்திருந்த காலத்திலும் அதே நச்சரிப்பு

ஆனாலும், கணேஸ் இல்லாமலேயே அந்த இரண்டு தாக்குதல்களும் வெற்றிகரமாக முடிந்த போதும்கூட, உற்சாகம் குன்றாமல் அடுத்த தாக்குதலுக்கான காத்திருப்புக்களில், வேட்கையோடு அவனது நாட்கள் நகர்ந்தன. கூடவே கோபியும் இன்னும் சில கரும்புலிகளும்.

ஏற்கெனவே இரண்டு விசைப்படகுகளை இழந்துவிட்ட எதிரி பின்வந்த நாட்களில் அதீத அவதானத்துடனேயே இயங்கினான்.

வரதன்- மதனுக்குப்போல, கண்டபின் தப்பி ஓடும் தந்திரத்தை அல்லாமல் - இவர்களின் கண்களில் தட்டுப்படுவதைத் தவிர்த்துவிடுவதையே தான், எதிரி தனது யுக்தியாகக் கையாண்டான்.

இப்படியாக - இலக்கை அடையாத துயரோடு இவர்கள் திரும்பி வருவதுகூட, பூநகரிக்குள் 'தவளைகள்' நுழையும்வரைதான் நீடித்தது.

கடலில் இரைதேடிவிட்டுக் கரையேறும் சமயங்களில், சக்கைவண்டிகளில் வரும் மற்றவர்கள், எங்கள் சண்டைப் படகுகளினூடு லாவகமாக வளைத்துத் திருப்பி அலை கிளம்ப ஓடிக் காட்டுகிறபோது. கணேஸ் மட்டும் மெதுவாகஓடி, ஓரமாக வந்து, அமைதியாகக் கரையேறுவான்.

"இந்த மாதிரி ஓட உன்னால ஏலாதா?" என்று யாராவது கேட்டால் "எதிர்பாராம ஏதாவது நடந்திட்டால்......" என இழுத்து, "அநியாயமாக எல்லோருமே சாகாமல் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யவேணும்" என்று தொடரும், அவன், "சம்பவம் ஆகக்கூடாது மச்சான், சரித்திரம் ஆகோணும்" என்று முடிப்பான்.

இப்போது -

'ஒப்பறேசன் தவளை' வரலாற்றுச் சமரில், நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீதான தாக்குதலில் முக்கிய பங்கேற்று, அந்த வீரமகன் சரித்திரமாகி விட்டான்!

அன்றைய காலம் -

இந்திய விஸ்தரிப்புவாதிகளின் படைகளை எதிர்த்து தமிழீழம் போர்க்கோலம் பூண்டிருந்த எழுச்சி நாட்கள்.

அப்போது அவனுக்கு வயது பதின்நான்கு தான்.

சாற மடிப்பிற்குள் சேட்டை மறைத்துக் கட்டிக்கொண்டு, அம்மாவுக்கு போக்குக் காட்டிவிட்டு வெளியேறுகின்றவனைப்பற்றி "தம்பி சந்தியில போஸ்ட்டர் ஒட்டிக்கொண்டு நிற்கிறான்" என்றோ, "கடையில சாப்பாட்டுப் பார்சலுகள் கட்டிக்கொண்டு அந்தப் பக்கமா போறான்" என்றோ யாராவது சொல்லுவார்கள்.

அம்மாவின் இதயம் வேகமாகத் துடிக்கும்.

அம்மாவுக்கும், நாகநாதி அய்யாவிற்கும் வாரிசாக, 21 வருடங்களுக்கு முன்னர் - பெப்ரவரி 13ஆம் நாளில் - பிறந்தவன் ஜீவநேசன்.

இத்தனை வருடங்களாக பாசத்தைக்கொட்டி வளர்த்தெடுத்த தாயல்லவா...... அவள் துடித்துப் போனாள். அவள்தான் துடித்தாளே தவிர அவன் ஓய்ந்ததில்லை.

திடீரென ஒரு காலை, அவசர அவசரமாக ஓடிவந்த அயல்வீட்டுக்காரர் ஒருவர், கடையில் சாப்பாட்டுப் பொதிகள் வாங்கிய ஜீவனை யாரோ காட்டிக்கொடுத்து, இந்தியர்கள் இழுத்துச் செல்கின்றார்கள் என்ற செய்தியைச் சொன்னபோது, அம்மா இடிந்துபோனாள். அந்தவீடு சாவீடு போலாகிவிட்டது. அழுகுரல் நவக்கிரி கிராமத்தை நிறைத்தது.

காங்கேசன்துறை இந்தியப்படைச் சிறையில் அடுத்த ஒரு வருடம் கழிந்தது. பார்க்கப் போகின்ற அப்பாவிடம் ஊர்ப்புதினங்களைத்தான் விசாரித்தானேயல்லாமல், வீட்டுப் புதினங்களையல்ல. மிகவும் அமைதியானவனான அந்தச் சிறுவனின் உள்ளத்தில், ஆவேசப் புயலொன்று அப்போதுதான் மையங்கொண்டது.

இந்தியர்கள் வெளியேற்றப்பட்டபோது, அவர்கள் விடுவித்து விட்டுப்போன கணேஷ், ஐந்தாறு நாட்கள் அம்மாவோடு இருந்துவிட்டு, முழுமையாகவே இயக்கத்திற்குப் போய்விட்டான்.

அம்மா துயரத்தோடு கடவுளை நேர்ந்து கொண்டிருக்க, அந்த விடுதலைப் புலி துப்பாக்கியோடு 'போர் உலா' வந்தான்.

வட தமிழீழப் போர் அரங்கின் அநேகமான எல்லா முனைகளிலும், அவனுடைய துப்பாக்கி கனன்றிருக்கின்றது.

கோட்டையை முற்றுகையிட்டிருந்தபோது, அதை முறியடிக்க வந்தவர்களை மண்டைதீவில் எதிர்கொண்டபோது, மாங்குளத்தில் படைமுகாமை அழித்த போது, 'வன்னி விக்கிரம' என்று படையெடுத்தவர்களைத் தோல்வியுறச்செய்தபோது, தாயகத்தின் இதயத்தைப் பாதுகாத்து மணலாற்றில் 'மின்னலை' தெறிக்கச் செய்தபோது, ஆனையிறவில் 'பலவேகய'வில் புறப்பட்டவர்களை 'ஆமை வேகய' வில் நகரச்செய்தபோது, மன்னாரில் படையெடுத்தவர்களுக்குப் பாடையெடுத்த பதுங்கித் தாக்குதலின்போது - இப்படியாக எங்கும், எல்லாச் சமர்களிலும் கணேஸ் சுவடு பதித்தான்.

அந்தக் காலத்திலேயே, ஒரு கரும்புலித் தாக்குதலுக்கான கனவு அவனது இதயத் துடிப்போடு கலந்துதானிருந்தது.

இப்படியிருக்கையில் ஒரு நாள் -

அது, கடந்த வருடத்தின் இறுதி. பலாலியிலிருந்து தெல்லிப்பளை நோக்கி முன்னேறிய 'ஒப்பறேசன் பூமியதிர்ச்சி' யை நிறுத்த நடந்த சண்டையின்போது -இடது முழங்காலுக்குக் கீழே துளைத்த ஒரு ரவை, முக்கிய நரம்பொன்றை அறுத்துச்சென்றுவிட்டது.

சண்டைமுனையில் மருத்துவ வசதியின்மையால் - பெருமளவு இரத்தம் வெளியேறிவிட, மயக்கமுற்று எடுத்துச் செல்லப்பட்ட கணேஸ் -

இரண்டு நாட்களுக்குப் பிறகு, யாழ்ப்பாண மருத்துவமனையின் கட்டிலொன்றில், வெடிபட்ட இடத்திற்குக் கீழே அந்தக் கால் அகற்றப்பட்டுவிட்ட நிலையில், அடக்கிக்கொள்ள முடியாத அழுகையோடு படுத்திருந்தான்.

போராட்டத்தில் காலை இழந்தமைக்காக அவன் கண்ணீரைச் சிந்தவில்லை. அருகில் நின்ற நண்பனின் கையைப் பற்றி அவன் விம்மினான், "இனி எப்படியடா நான் சண்டைக்குப் போறது......?"

கணேஸ்!

எவ்வளவு மென்மையானவனாக அவன் வாழ்ந்தான்! எவரோடும் சச்சரவுக்குப் போகாமல், எல்லோரையும் சமாளித்துக்கொள்வானே! என்னதான் பிரச்சினையென்றாலும், விட்டுக் கொடுத்துவிட்டு விலகிக்கொண்டானே தவிர, அவன் சண்டை பிடித்துப் பெரிதாக்கியிருக்க மாட்டான். அவன் எவ்வளவோ பொறுமைசாலியாக இருந்தான்; எல்லா விடயங்களிலுமே.

அவனை மேலோட்டமாகப் பார்க்கிற எவரும், எதுவுமே தெரியாத அப்பாவி என ஒரு கணிப்பீட்டைவைப்பார்கள்.

விசயம்தெரியாத நாலுபேரை இருத்திவிட்டு, எல்லாம் தெரிந்த மேதாவிகளைப்போல புழுகித்தள்ளும் நண்பர்களைத் தன்னிடம் வசமாகச் சிக்கவைத்து - "தேவையில்லாம வாயக்குடுத்து மாட்டிக்கொண்டோமே" என்று தலையைப் பிய்த்துக்கொண்டு எழுந்துபோகிற அளவுக்கு அவன் கொண்டுபோய்விடுவான்.

இருப்பினும், தனக்குத் தெரியாத- அது தொடர்பான பூரண அறிவு இல்லாத - எந்த விடயங்களைப்பற்றியும் அவன் வாய் திறக்கவே மாட்டான். வெட்கப்படாமல் - விசயம் தெரிந்தவர்களிடமிருந்து விசயங்களைத் தெரிந்து கொள்வதில்தான் அவனுக்கு ஆர்வம் அதிகம்.

தான் செய்ய நினைக்கும் காரியங்களைச் செய்துமுடிக்கும்வரை முயற்சி எடுப்பதும், காலிழந்தவன் என்று கருணைகாட்டி மற்றவர்கள் உதவ முன்வந்தாலும் புன்சிரிப்போடு மறுத்துவிட்டு, தானே எல்லாவற்றையும் செய்துமுடிப்பதும், ஒரு கால் இல்லாமலும்கூட முகாமிலிருக்கும் முழு மனிதர்கள் செய்யும் வேலைகளிலெல்லாம் தன்னையும் ஈடுபடுத்த எத்தனிப்பதும் அவனது சிறப்பான அம்சங்கள். அவை நாங்கள் அவனிடம் படிக்கவேண்டிய பாடங்கள்.

காயம் மாறி - ஜெய்ப்பூர் காலோடு துயரத்தையும் சுமந்து - மருத்துவமனையிலிருந்து வந்தவனுக்கு, யாழ். மாவட்ட தாக்குதற் படைப்பிரிவில் நிதி வேலை கொடுக்கப்பட்டபோது, சண்டைக்குப் போகவேண்டுமென தளபதியோடு சண்டைபிடித்து ஆனையிறவுக்குப் போனதும் -

அகன்ற பாத்திரத்தில் சோறு குழைத்து, ஐந்தாறு பேர் சேர்ந்து நாங்கள் சாப்பிடும் போது - வெறுமையாகும் பாத்திரத்தை நிரப்பிவர வேறெவரையும் பாராமல், தானே தூக்கிக்கொண்டு எழுவதும் -

'ஜெயராஜ்' முகாமிலிருந்த 'அருகிருக்கை' பொருத்திய B.S.A. மோட்டார் சைக்கிளில் அவனை இருத்தி நாங்கள் தள்ளி விளையாடுகையில் - வளைத்து திருப்பி ஓட வீடு வசதி காணாதென்று முற்றத்துக்கிறக்கி, பின் முற்றமும் வசதிகாணாதென்று வீதிக்கெடுத்தபோது, தளபதியைக் கண்டு நாங்கள் தடுமாற, வேலியோடு மோதி வண்டி கவிழ, தலையில் நல்ல அடிபட்ட அவன் எழுந்து பிடரியைச் சொறிந்துகொண்டு நின்றதும் - தண்டனை தந்தபோது - கும்மாளமிட்டபடி அவனும் சேர்ந்து செய்ததும் -

கிளாலியில் எம்மவர்களை வேட்டையாட வரும் எதிரியை நாங்கள் வேட்டையாடும் கடற்சண்டைகளில், 'நேவி'யைக் கலைத்து விரட்டும் புலிகளின் விசைப்படகுகளிற்கு அவன் ஓட்டியாய் இருந்ததும் -

ஐந்து நாள் ஓய்வு தந்து வீட்டுக்கனுப்ப - 'இன்று படகுச்சேவை' என்று நாளேட்டின் செய்தியைப் பார்த்துவிட்டு - பாதுகாப்புப் பணியிலீடுபடஇரண்டாம் நாளே புறப்பட்டு அவன் கிளாலிக்கு வந்ததும் -

அப்போதெல்லாம் கரும்புலித் தாக்குதல் ஒன்று செய்யவேண்டுமென்ற வேட்கையை, தனது மனக்குகையினுள் அவன் சுமந்துகொண்டு திரிந்ததும் -

நாங்கள் அடிக்கடி அவனைப்பற்றிப் பேசிக்கொள்ள எங்களுக்குள் உயிர்வாழும் அவனது நினைவுகள்.

அவனது வீரம்; அவனது தியாகம்; அவனது முயற்சி; அவனது விட்டுக்கொடுப்பு; அவனது முன்மாதிரி; ஒட்டுமொத்தமாக அவனே எப்போதும் நினைவுகொள்ளவேண்டிய எடுத்துக் காட்டுகள்.

கணேஸா!

உனது வீட்டுக்கு நீ போய்வந்த அந்த இறுதிப் பயணம்.

அதை நினைக்கும்போதெல்லாம் உன் அம்மாவின் விழி ஓரங்களில் நீரின் கசிவு.

"பழஞ்சோறு குழைச்சுத் தீத்தி விடணை" என்று சாப்பிட்டாயாம்.

ஒருநாளுமில்லாததுபோல, அப்பாவையும் அம்மாவையும் கொண்டு நீர் அள்ளிக் குளித்தாயாம்.

www.eelamview.com

www.eelamview.com





கரும்புலி மேஜர் கனேஸ்

கரும்புலி மேஜர் கோபி

"மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று, மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்ப்பதற்கு, எதையும் செய்ய அவர்கள் தயாராக இருந்தார்கள்." – தலைவர் –

''தலையெல்லாம் காஞ்சுபோய்க் கிடக்கு தேடா...... கொஞ்சம்எண்ணை வையன்ரா......'' என்று ஆதரவாகக் கேட்ட அம்மாவிடம், ''நாளைக்கு கடல் தின்னப்போற தலைதானே யணை......'' என்றும் சிரித்தபடி சொன்னாயாம்.

முன்னர் யாரோ சொன்னது நினைவுக்குவர, இப்போது சாதுவாக சந்தேகமும் எழ, ஆச்சரியத்தோடும் அச்சத்தோடும், '' நீ கரும்புலியாய் போகப்போறியாம் தம்பி...... உண்மையாவோடா......?'' என்று பரிதாபமாகக் கேட்ட அம்மாவை, சிரித்துக்கொண்டு வந்து கட்டிப் பிடித்துக் கொஞ்சி, "உன்னை விட்டிட்டுப் போவனோணை அம்மா!" என்று சொல்லிவிட்டுப் போனாயாம்.

இப்போது -

கண்ணீரோடு அந்தத் தாய், தன் வீர மகனின் படத்திற்குப் பூப்போட்டுக்கொண்டிருக்கின்றாள்.

'ஒப்பறேசன் தவளை'க்கான உற்சாகமான முன்னேற்பாடுகள்.

உறக்கமற்ற இரவுகள்; ஓய்வற்ற நாட்கள்.

கடற்புலி வீரர்களின் கடுமையான கடற் பயிற்சி.

வெடிமருந்துப் படகினை எதிரியின் தளத்தோடு மோதும் செயல்முறையை, கணேஸ் சலிப்பின்றிக், களைப்பின்றிப் பயின்றான்.

அந்த நாள் வந்தது -

சர்வதேச செய்தி நிறுவனங்களின் அலை வரிசைகளில் புலிகள் இயக்கத்தை முதன்மைப் படுத்திய நாள் அது.

சாமம் கழிந்த நள்ளிரா வேளை.

சமர் ஆரம்பித்துவிட்டது; பூநகரியில் புயல் வீசத் தொடங்கிவிட்டது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைச் சூழ்ந்த புலிகளின் கடல் - தரை வழிகளிலான ஆக்ரோசமான பாய்ச்சல்.

அங்கிருந்த, 'றாடர்' கோபுரமும் தகவல் பரிவர்த்தனை நிலையமும்தான் கணேசின் இலக்கு.

உரிய நேரம் வந்தது. உத்தரவுக்காகக் காத்திருந்தவன், இதுதான் உரிய தருணம் என்பதைத் தானாகவே தீர்மானித்தான்; புறப்பட்டான்.

கடலில் - தனது தளத்தைச் சுற்றி - எதிரி அமைத்திருந்த முட்கம்பி வேலிகளை எகிறிக் கடந்து பாய்ந்தது கணேசின் வெடிமருந்துப் படகு.

இலக்குப் பிசகாத தாக்குதல். தொடரும் வெடியோசைகளுக்கு நடுவே கடலதிரும் குண்டோசை. கண்ணிமைப்பொழுதில் பிரகாசித்த ஒளிப்பிழம்பு.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில், தமிழர்களின் பிணங்களை மிதக்கச் செய்தவர்களை, அதே கடல் நீரேரியிலேயே பிணங்களாக மிதக்கச்செய்துவிட்டு, உப்பு நீராக உருமாறிப் போனான் அந்த வீரன்! ○

# கடற் கரும்புலி மேஜர் கோபி

**படித்து முன்னேற முடியவில்லை என்ற வேதனை அவனது மனதைப் பாரமாக அழுத்தும்போதெல்லாம், தாங்கள் அவலமாக ஓடிவந்த அந்த நாள் அவனது நினைவில் உறைக்கும்.**

'ஒப்பறேசன் தவளை' க்கு இன்னும் பத்தே நாட்கள் தான் இருக்கின்றன.

கோபி ஊருக்குப் போனான்.

தாயினதும், தனயனதும் மகிழ்ச்சிகரமான ஒரு சங்கமம். பாசம் கரைபுரண்ட அன்பு முத்தங்களின் பரிமாற்றம். எப்பவோ கேட்க வேணும்போல இருந்த தனது நீண்டகால மன உளைச்சலை அம்மா, மகனிடம் இப்போது வெளிப்படுத்தினாள்.

''உனக்குக்காலும்இல்லைத்தானே தம்பி...... இனியும் இயக்கத்தில இருந்து என்னப்பன் செய்யப்போறாய்.. ..?''

அந்தத் தாயுள்ளம் ஏக்கங்களோடு ஆதங்கப்பட்டது.

''காலில்லாட்டியும் பரவாயில்லையம்மா...... இயக்கம் என்னைப் பார்த்துக்கொள்ளும் ... நான் கடலில வேலை செய்வன், கடற்புலிகளில படகு ஓடுவன் ...''

''கடலில நேவி வந்திட்டா என்னடா தம்பி செய்வாய்......?......!''

இது அன்னையின் அச்சம். அது இயல்பானது; அவன் புரிந்துகொண்டான்.

புன்னகையோடு பதில் வந்தது.

''பயப்படாதீங்க அம்மா.. ... பொடியள் இருக்கிறாங்கள் என்னைக் காப்பாத்துவாங்கள்; விடமாட்டாங்கள்.''

அம்மாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லைத்தான். இருப்பினும், முகத்தில் திருப்தி தெரிந்தது.

பழைய நண்பர்கள் சேர்ந்தனர்; 'பிரிந்தவர் கூடினால்......!' 'அது ஒரு ஆரவாரமான சந்திப்பு.

''அடுத்த மாவீரர் நாளுக்கு எங்கட வீட்டுக்காரரும் துயிலுமில்லம் போவினமடாப்பா''

- கோபி சொல்லிவைத்தான்.

'' இவன் நல்ல பகிடிவிடுறான்,'' நண்பர்கள் ரசித்துச் சிரித்தனர்.

'' எங்கட வீட்டு ஒழுங்கைக்கு 'கோபி வீதி' எண்டு பேர்வைக்க வேண்டிவரும் ''

- கோபி இதையும் சொல்லிவைத்தான்.

நாலைந்து நாட்கள் இனிமையாகக் கழிய, எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு கோபி போய்விட்டான்.

**1989** ஆம் ஆண்டின் மையப் பகுதியில், அவன் தன்னை ஒரு விடுதலைப்புலி வீரனாக்கிக்கொண்டான்.

'சேரா பிறாவோ'முகாமின் 2ஆவது தொகுதியில் பயிற்சி எடுக்கும் காலத்திலேயே, அவனது ஆற்றல்கள் வெளிப்படத் துவங்கின.

மன்னார் மாவட்டப் படையணியில் இருந்து. பல்வேறு சண்டைகளிலும் பங்காற்றித் தனது திறன்களைக் காட்டிய கோபி, சிலாபத்துறை இராணுவ முகாம்மீது நாம் தொடுத்த மிகப்பெரிய தாக்குதல் முயற்சியின்போது, பலத்த காயத்துக்குள்ளானான்.

சிகிச்சை முடிந்து - காயம் மாறி - அவன் வந்தபின்பு, 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி' யின் உருவாக்கத்திற்கென மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்து அனுப்பப்பட்ட புலிகளின் அணி, அவனையும் கொண்டிருந்தது.

சாள்ஸ் அன்ரனி படையணி, அவனது ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது என்று சொல்லலாம்.

அந்தப் படையணி எதிரியை எதிர்கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த வீரன் தீரத்துடன் களமாடினான்.

சாள்ஸ் அன்ரனி படையணியில், கண்ணி வெடிப் பிரிவில்தான் அவனது பணி துவங்கியது. கால அசைவில் தளபதி பால்ராஜின் பாராட்டுக்களைப் பெற்ற போராளிகளுள் ஒருவனாக அவன் வளர்ந்தான்.

சிங்களப் படையினர் விழி இமையாது காவலிருக்கும் அரண்களின் ஊடுகளுக்குள் அந்த வீரனது இரவுகள் கழியும்.

தனது பாதுகாப்பிற்கெனத் தன்னைச்சூழ எதிரி விதைத்து வைத்திருக்கும் மிதி வெடிகளையும் பொறிவெடிகளையும் அகற்றிவிட்டு, அவனது அழிவிற்கென, அவனுக்கு நடுவில் எமது வெடிகுண்டுகளையும் கண்ணிப்பொறிகளையும் நாட்டும் அபாயகரமான பணி அவனுடையதாக இருந்தது.

எதிரி குடியிருந்த இடங்களுக்கெல்லாம் அவன் குண்டுகொண்டு போனான்.

கண்ணிவெடிப் பிரிவில் திறமையான முறையில் செயலாற்றும்போதே துணிகரமாக அவன் பார்த்த வேவு வேலைகளும், வேவுப் பணியில் அவன்காட்டிய ஈடுபாடும், அவனை ஒரு வேவுப்படை வீரனாக்கியது.

அவனது ஆர்வத்திற்கும் ஊக்கத்திற்கும் வழி அமைத்து நெறிப்படுத்திய தளபதி பால்ராஜ், கண்ணி வெடிப் பிரிவில் செயற்படும் அதே சமயத்திலேயே இராணுவ வேவுப்பிரிவில் செயற்படவும் அவனை நியமித்தார்.

உயிராபத்து நிறைந்த சூழ்நிலைகளில் - எதிரியின் உள்ளங்கையில் ஏறி அவனதுகைரேகைகளை மனனஞ்செய்து - மதிநுட்பம் மிக்க விதமாக கோபி செய்த வேவுப் பணிகள் அதிசயமானவை. தாக்குதல் திட்டங்களைத் தயாரிக்கின்றபோது, அவற்றின் பயன்பாடுகளின் தார்ப்பரியங்கள் உணரப்பட்டன.

ஆனையிறவுக்குக் கிழக்கே - தட்டுவன்கொட்டியில் - சிங்களப் படையின் 22 காவலரண்களை வீழ்த்திய தாக்குதலின் வெற்றிக்காக, மேஜர் கிண்ணியோடு சேர்ந்து அவன் ஓய்வற்று உழைத்தான். தாக்குதல் இலக்கு தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து சண்டை முடிந்து வெளியேறுகின்றவரை, இடைப்பட்ட காரியங்கள் எல்லாவற்றிலும் கோபி இருந்தான்.

www.eelamview.com

**இலக்குகளைத் தேடி இவர்கள் போனார்கள்; ஆனால், இலக்குகள் அவர்களைவிட்டுத் தப்பியோடிக்கொண்டிருந்தன. கடலலை போல காலமும் கரைய, வந்து சேர்ந்தன 'ஒப்பறேசன் தவளை'யின் நாட்கள்.**

இதன் பின்னர், பூநகரிக்குத் தெற்கே பள்ளிக்குடாப்பகுதிக் காவல் அரண்கள் மீதான பெரியதொரு தாக்குதலிற்கான தயாரிப்புக்கள் செய்யப்பட்டன. அங்கு கோபி, இரவு பகலின்றிப் பாடுபட்டான் தாக்கும் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு வேவு பார்த்து, தாக்குதல் அணிகளுள் ஒரு தொகுதிக்குப் பாதைகாட்டி, தாக்குதல் குழுவோடு களத்திலும் இறங்கி அந்தத் தாக்குதலில் கோபி ஆற்றிய பங்கு, முக்கியத்துவம் மிக்கது. ஆனாலும், ஆற்ற முடியாத பெரும் சோகம் அவனது இதயத்தைக் கவ்விய இழப்பாக, அந்தத் தாக்குதலில் லெப். கேணல் சுபன் களப்பலியாக நேர்ந்துவிட்டது.

அடுத்ததுதான் பலாலி-

சிங்கள ஆட்சியாளர்களையும் படைத்தளபதிகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய மிகப்பெரிய தாக்குதல் நடவடிக்கை அது!

பலாலி கூட்டுப்படைத்தளத்தின் கிழக்குப் பகுதியில் - விமான இறங்கு தளத்தின் பாதுகாப்பிற்கென இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் அமைக்கப்பட்ட - 4½ கிலோ மீற்றர் நீளமான பாதுகாப்பு வியூகத்தைப் புலிப்படை வீரர்கள் பிய்த்தெறிந்த வீர சாதனை அது.

கெரில்லாப் போர்முறையின் ஒரு புதிய பரிணாம வடிவத்தில் புலிகள் நிகழ்த்திய இந்தப் பெருமெடுப்பிலான தாக்குதலின் திட்டத்தை வரைவதற்கு உறுதுணையாக இருந்த முக்கியமானவர்களுள், கோபியும் ஒருவன்.

எதிரியின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக அவதானித்து, ஒவ்வொரு அங்குலத்தையும் துணிகரமாக வேவுபார்த்து, தாக்குதலின் போது தாக்குதலணிகளுக்கு வழிகாட்டியாகச் சென்றதோடு மட்டும நின்றுவிடாது -

போரிடும் வீரனாய்ச் சண்டையில் இறங்கி, இடது காலை ரவை துளைத்துச் சென்ற பின்பும் சண்டையிட்டு, காயமடைந்த - களப்பலியான - தோழர்களுடன் ஆயுதங்களையும் அகற்றும்வரை, களமுனையிலிருந்து தான் வெளியேற மறுத்து, சோர்ந்து விழுந்து, சுய நினைவிழநது, 'இனி இயங்காது' என்ற காலை மருத்துவர்கள் இதயம் நோக அகற்றிவிட......

அந்த வெற்றியின் பிரசவிப்பிற்காக மூன்று மாதகாலமாக - படுக்கையின்றி, பட்டினி கிடந்து - ஓயாது சுழன்று - அல்லும் பகலும் கசங்கிய அந்த விடுதலைப் புலி, உடல் வேதனையோடும் ஆனால் உள நிறைவோடும் படுத்திருந்தது.

ரவையுடைத்துச் சென்ற எலும்பிற்குக் கட்டுப்போட்டுக்கொண்டு, அடுத்த கட்டிலில் படுத்திருந்த நண்பனிடம் கோபி அடிக்கடி சொல்லுவான் -

''கால் போனது கவலைதான்; ஆனா அது ஒரு பிரச்சினை இலலை போராட்டத்துக்காக செய்யிறதுக்கு இன்னும் எவ்வளவோ வழியிருக்குத்தானே......''

## கோபி!

அவன் மிகவும் மிருதுவானவன். எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் விதமாக அவன் நட்புக்கொள்ளும முறை அபூர்வமானது.

அடுத்தவர்களை அனுசரித்து, அன்புகாட்டி அவன் பழகும் பண்பு அற்புதமானது.

தான் நிற்கும் இடம் எல்லாவற்றையுமே கும்மாளச் சிரிப்பாலும், குதூகலத்தாலும் நிறைத்துவிடும் அவனுடைய குணாம்சம் சிறப்பானது.

இலட்சிய உறுதியாலும், விடா முயற்சியாலும், செயற்திறனாலும் வளர்ந்தவன் அவன்.

வேவு வேலைகள் கொடுக்கப்படும்போது - ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாகவும், திறமையாகவும் செய்து முடிக்கும்வரை - 'செய்து முடிக்கவேண்டும்' என்ற உணர்வின் உந்துதலோடு - திரும்பத் திரும்பப் போய், முயற்சி எடுக்கும் தன்மை அவனுடையது.

எப்பொழுதும் சண்டைகளைப் பற்றியே பேச்சு; தாககுதல்களைப் பற்றியே எண்ணம்; போர்த் திட்டங்களைப் பற்றியே சிந்தனை. தளபதி பால்ராஜுடன் அவன் கதைக்காத நாள் கிடையாது; கதைப்பதற்கு பகலென்றும் இரவென்றும் நேரம் கிடையாது; அந்தக் கதைகளிலெல்லாம் போரன்றி வேறெதுவும் கிடையாது.

''அங்கு ஒரு நல்ல 'ராக்கற்' இருக்கு''; ''இந்த இடத்தில அவன் வழமையா வந்து போறான்''; ''அந்தப் பக்கம் அடிக்கக்கூடிய மாதிரி இருக்கு'' என்றுதான் அந்தப் புலிவீரன் பேசிக்கொண்டிருந்தானே அல்லாமல் - தனது குடும்பத்தின் கஷ்ட நிலையைப் பற்றி, வானமே கூரையான அவர்களின் வாழ்வைப் பற்றி, அவன் ஒருபோதுமே வாய் திறந்ததில்லை.

அது மலையகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்க் குடும்பம்.

கேகாலையில் உள்ள 'மாவனெல்ல'தான், சுப்பிரமணியம் ஐயாவினுடைய குடும்பத்தின் பூர்வீகக் குடிநிலம்.

ஒரு அக்காவிற்கும் மூன்று தம்பிகளிற்கும் இடைப்பட்டவனாக, 1973 யூன் 6 இல் பிறந்தவனுக்கு செல்வலிங்கம் எனப் பெயரிட்டு, கண்ணன் என்று செல்லமாக அழைத்தனர்.

அந்தக் குடும்பத்தின் நிறைவான பொருளாதார வாழ்வை மட்டுமல்ல, அவர்களின் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் சேர்த்து சிங்களப் பேரினவாதம் சிதைதததது.

பத்து வருடங்களுக்கு முன்னர், இலங்கைத் தீவையே இரத்த களமாக்கி, தமிழர்கள் மீது கோரமான இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது, விரட்டியடிக்கப்பட்ட குடும்பங்களுள் அதுவும் ஒன்று.

அல்லல்பட்டு வந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களோடு, அந்தக் குடும்பத்தையும் தாங்கிக் கொண்டது தமிழீழம்.

மன்னாரில், பல்லவராயன்கட்டு கிராமத்தில் அவர்கள் குடியேறும்போது, கோபிக்குப் பத்தே வயதுதான்.

'சிங்களவர்களோடு தமிழர்கள் ஒருகாலத்திலும் சேர்ந்து வாழ முடியாது' என்பது, ஒரு ஆழமான உண்மையாக, அந்தப் பிஞ்சு நெஞ்சில் அப்போதேயே பதிந்தது.

நன்றாகப் படிக்கவேண்டுமென்றும், நல்ல அறிவாளியாக வளரவேண்டும் என்றும் அந்தச் சிறுவனுக்கு நிறைய ஆசை. அதில் ஊக்கமும் ஆக்கமும் கொண்ட பள்ளிக்கூட மாணவனாக அவன், 9 ஆம் வகுப்புவரை பாடசாலைக்குப் போனான்.

படம் பார்க்கவென்று அம்மா கொடுக்கும் பணத்தை வாங்கிச் சென்று, படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்கிவந்து சேர்க்கும் அளவுக்கு இருந்தது அவனது கற்கும் ஆர்வம்.

ஆனால், உக்கி உதிரும் கூரையும் சொரிந்து சரியும் திண்ணையுமாக அந்தக் கொட்டில் வீட்டின் ஏழ்மை நிலையினால், அவனது ஆர்வத்திற்கும் முயற்சிகளும் ஒத்துழைக்க முடியவில்லை.

இந்த வேதனை அவனது மனதைப் பாரமாக அழுத்தும் வேளைகளில் எல்லாம், தாங்கள் அவலமாக ஓடிவந்த அந்த நாள், அவனது நினைவில் உறைக்கும்.

விரிவாக்கம்கண்டுவந்த விடுதலைப் போராட்டத்தில், தானுமொரு தமிழ்க்குடிமகன் என்ற வகையில், தனககுரிய பங்கை உணர்ந்துகொள்ள அவன் தவறவில்லை.

படித்து முன்னேறவேண்டுமென ஆர்வத்தோடு வாங்கிய பாடப் புத்தகங்களிற்குள், ஒளித்து வாங்கிவந்த போராட்ட நூல்களை மறைத்துப் படிக்க அவன் துவங்கினான்.

அந்தச் சிறுவன் வளரவளர அவனுள் அரும்பியிருந்த விடுதலை உணர்வும் விஸ்வரூபம் எடுத்துவந்தது. அது ஒரு கட்டாயக் கடமையாகவும அவனுள் பரவியது.

கடற்புலிகள் அணி அந்த வீரனைத் தன தாக்கிக்கொண்டது 1993 இன் ஆரம்பத்தில் தான்.

எதிரியானவன் சிறந்த சண்டைப்படகுகளுடனும், நவீன ஆயுதங்களுடனும் கடலில் வருகின்றான. எம்மிடமிருப்பது குலையாத ஆன்ம உறுதியும், எமது உயிரும்தான். இவற்றைக் கொண்டு நாங்கள் அவனைச் சந்தித்தேயாக வேண்டும் என்ற கருத்தைச் சுமந்து வாழ்ந்த அந்த வேங்கையின் கரும்புலிக் கனவு நனவாக, சந்தர்ப்பமும் கிடைத்தது.

கிளாலிக் கடலில் எதிரியைத் தேடியலையும் வெடிமருந்துப் படகொன்றுக்கு கோபி சொந்தக்காரனாயிருந்தான்; இன்னொன்றுக்குக் கணேஸ்.

வரதனும் மதனும் உடைத்தபின், நாகதேவன்துறையில மிஞ்சிக் கிடந்த விசைப்படகுகள் புலிகளின் கைக்கு மாறும்வரை அவைதான் அவர்களின் குறி.

இலக்குகளைத் தேடி அவர்கள் போனார்கள்; ஆனால், இலக்குகள் அவர்களைவிட்டுத் தப்பியோடிக்கொண்டிருந்தன.

கடலலைபோல காலமும் கரைய, வந்து சேர்ந்தன 'ஒப்பறேசன் தவளை'யின் நாட்கள் -

கோபியின் கடைசி 48 மணிநேரங்கள் அவை-

யாழ். கடல்நீரேரியின் ஓரத்தோடு-கௌதாரி முனைக்கும் பள்ளிக்குடாவிற்கும் மேற்கே - இந்துமா சமுத்திரத்தின் ஆர்ப்பரிக்கும் அலைகளை ஊடறுத்து அவனது படகு விரையும்.

அவனைக் காணும் எதிரியின் பீரங்கிப் படகுகள் மண்டைதீவுப் பக்கமாக எட்டத்துக்கு விலகும்.

"உங்களை நம்பியே தரையில் எங்கள் போராளிகள் போரிடுகின்றார்கள். சமர் முடிந்து அவர்கள் முற்றாக வெளியேறும்வரை நேவி இறங்காமல பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு உங்களிடமுள்ளது"

சண்டைக்கு முன்னர் தலைவர் சொன்னதை ஒவ்வொரு கணமும் அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

நடுக்கடலில் இயந்திரம் பிசகும், படகு உடனடியாகக் கரைக்கு விரையும்; அவனது 'அவசரம்' அவசரப்படுத்தும்; திருத்தவேலை துரிதமாகும்; படகு மீண்டும் புறப்படும். அந்த இரண்டு நாட்களுக்குள் இது அடிக்கடி நடந்தது.

இப்படியாக வந்துவந்து போனவனை -கடைசித் தடவைக்குப் பிறகு - "அதே சிரித்த முகத்தோடு" நாங்கள் காணவில்லை......

எங்கள் கோபி!

'கடலில நேவி வந்தால் பொடியள் காப்பாத்துவாங்கள்' என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தாயா......

எப்படியடா முடியும்?

எங்களால் நெருங்க முடியாத உயரத்தில் நீ;

எங்களால் எட்டமுடியாத உயரத்தில் உனது இலட்சிய வேட்கை!

நண்பா! அந்த இலட்சியத்தை அடையும்வரை - அதே வழிகாட்டலில் - நாம் அணிவகுப்போம்.

சென்று வா! ○

## அன்றும் இன்றும்

*"என்ன ஸேர், நீங்கள் தனித்தமிழ் நாடு பற்றி கதைக்கிறியள்; அரச கடற்படை ஊர்காவற்றுறையிலோ காங்கேசன்துறையிலோ வந்து நின்று பத்து ஷெல் அடித்தால், உங்க தனிநாடு இந்து சமுத்திரத்துக்குள்ள போகாதோ!"*

*- இது 1968 ஆம் ஆண்டு, ரயிலில் நடைபெற்ற ஓர் உரையாடல். நாடாளுமன்ற உறுப்பினராயும் பிரதிச் சபாநாயகருமாயிருந்த திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள், இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான திரு. வ. நவரத்தினத்தைப் பார்த்துச் செய்த நகையாடல்!*

*கனடாவிலிருந்து திரு. வ. நவரத்தினம் இப்போது வெளியிட்டுள்ள ஒரு ஆங்கில நூலில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இது அன்று நடைபெற்ற நிகழ்ச்சி.*

*இன்று......?*

*அவர்கள் பயந்து எண்ணிய அதே படையினரிடமிருந்து, அதே பீரங்கிகள் போரில் பறித்துவரப்பட்டுள்ளன; சண்டைப்படகுகளோடு, கனரக ஆயுதங்களும் ஏராளம்!*

*முன்னைய வெறும் பேச்சு இன்றில்லை -*


*எம் உயிரினுமினிய தமிழீழத்திற்காக விடுதலைப்போர் - ஆயுதப்போர்- துணிவு; ஈக உணர்வு -*

*இது இன்றைய நிலை.*

www.eelamview.com



# 'ஒப்பரேசன் தவளை'யில் கடற்புலிகள்



தலைவருடன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை.

**சிங்களக் கடற்படையைச் செயலிழக்கச் செய்வதன் மூலம்தான் பெரு வெற்றியைப் பெறமுடியும் என்பது, 'ஒப்பரேசன் தவளை' தாக்குதல் திட்டத்தின் பிரதான அம்சமாகும்.**

ஈருடகத் தாக்குதல் திட்டத்தைக்கொண்ட பூநகரி கூட்டுத் தளம் மீதான 'தவளை' இராணுவ நடவடிக்கையில் கடற்புலிகள் ஆற்றிய பங்கும் - பணியும் மிக முக்கியமானதாக இருந்தது.

நாகதேவன்துறையில் அமைக்கப்பட்டிருந்த சிங்களக் கடற்படையின் படகுத்துறையைக் கைப்பற்றுவதுடன், இந்தச் சண்டை முடியுமவரை பூநகரி கூட்டுத்தளத்திற்கு கடல்மூலம் உதவிகள் கிடைக்கவிடாது தடுப்பதும் கடற்புலிகளின் விசேட பணியாக இருந்தது. அதேவேளை, காயம்பட்ட போராளிகள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்படுவதற்கும், சண்டையிடும் போராளிகளுக்கான உணவு தொடக்கம் சகல விநியோகங்களும் நடந்த, குடாக்கடலூடான கடற்போக்குவரத்திற்கும் கடற்புலிகளே பாதுகாப்பைக் கொடுத்து அப்பணியைத் திறம்படச்செய்தனர்.

11-11-1993 அன்று அதிகாலை தாக்குதல் தொடங்கியபின் நாகதேவன்துறை படகுத் தளத்தினுள் ஊடுருவிப் பாய்ந்த கடற்கரும்புலி மேஜர் கணேஸ், வெடிமருந்து நிரப்பப்பட்ட தனது படகை எதிரியின் நிலைமீது மோதி கடற்படையினரை நிலைகுலைய வைத்தான். அதைத் தொடர்ந்து கடல்வழியாக கடற்புலி வீரர்கள் தொடுத்த அதிவேகத் தாக்குதல்களால், எதிரியின் ஐந்து நீருந்து விசைப்படகுகள் கைப்பற்றப்பட்டன. நாகதேவன்துறை புலிகளின் கையில் வீழ்ந்தது.

அன்றைய இரவு விடிந்ததும் மன்னார்க் கடலிலுள்ள பாலைதீவுப் பக்கமிருந்து, கல்முனை - பள்ளிக்குடா கரையோரமாகத் தரையிறங்க எதிரி முயன்றான். இத் தரையிறக்க முயற்சியில் எதிரியின் இரண்டு தரையிறக்கும் கலங்கள் ( Landing Craft ) ஈடுபட்டுக்கொண்டிருந்தன ( ஒரு தரையிறக்கும் கலம் ஒரே தடவையில் 600 சிப்பாய்களை அவர்களது ஆயுதங்களுடன் ஏற்றி - ஒரு அடி ஆழத் தண்ணீர்வரை வந்து - தரையிறக்க வல்லது ).

இத்தரையிறக்க நடவடிக்கைக்கு உதவிபுரிய 'வீரயா' - 'சூரயா' வகையைச் சேர்ந்த இரண்டு மோட்டார் பீரங்கிப் படகுகளும், அதேவேளை நான்கு 'டோரா' சண்டைப் படகுகளும் கரையை நோக்கியும், கடலில் நின்ற கடற்புலிகளின் படகுகளை நோக்கியும் குண்டுமழை பொழிந்துகொண்டிருந்தன. இதேவேளை வானில் வட்டமிட்டபடி உலங்குவானூர்திகளும் - குண்டுவீச்சு விமானங்களும் கடற்புலிகளின் படகுகள்மீது தாக்குதல்களை நடாத்தி, சிங்களப்படையின் தரையிறக்கத்திற்கு உதவ முயற்சித்துக்கொண்டிருந்தன.

ஆனாலும், பூநகரித் தளத்தைவிட்டு புலிகள் வெளியேறும்வரை ( 13ஆம் திகதி மாலைவரை ) வானிலிருந்தும் கடலிலிருந்தும் எதிரி பொழிந்த குண்டுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தபடி துணிச்சலுடனும் - சாதுரியத்துடனும் போரிட்ட கடற்புலிகள், எதிரியின் தரையிறக்கத்தைத் தடுத்து நிறுத்தி, தாக்குதல் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தனர்.

சிங்களக் கடற்படையைச் செயலிழக்கச் செய்வதன்மூலம்தான் இம்முகாம் தாக்குதலின் முழுப்பலனையும் பெறமுடியும் என்பது, புலிகள் வகுத்த தாக்குதற் திட்டத்தின் ஒரு பிரதான அம்சமாகும். அதைக் கடற்புலிகள் செவ்வனே செய்து ஒரு சாதனை படைத்துவிட்டனர்.

பூநகரி கூட்டுத்தளமானது தனது சொந்தப் பாதுகாப்பிற்கு சிங்களக் கடற்படையையே பெரிதும் நம்பியிருந்தது. யாழ். நீரேரியை ஒரு புறத்திலும் மன்னார்க் கடலுடன் தொடர்புடைய நிலத்தை மறுபகுதியிலும் கொண்டு, இந்தக் கூட்டுத்தளம் அமைந்திருந்தது. கடற்பலத்தைப் பொறுத்தளவில் சிங்களப் படையானது ஒரு அதீத நம்பிக்கையுடனேயே இருந்தது.

கடல்வழிமூலமான ஒரு கெரில்லாத் தாக்குதலுக்குரிய சக்தியைக் கடற்புலிகள் கொண்டிருந்தாலும், பட்டப்பகலிலும் தொடர்ந்து நடைபெறும் ஒரு கடற்சண்டைக்குரிய திறனை கடற்புலிகள் கொண்டிருக்கவில்லை என்றே, படைத்துறையின் உயர்பீடம் கருதியது. இதனால் பூநகரி முகாம் புலிகளால் தாக்கப்பட்டாலும் கடல்மூலமான உதவிகளைப் பெற்றுத் தாக்குதலை முறியடிக்கலாம் என்றே, படைத்துறை உயர்பீடம் நம்பியிருந்தது.

ஆனால் பூநகரி கூட்டுத்தளம்மீது தொடர்ந்து தாக்குதல் நடந்த மூன்று நாட்களும், கடற்புலிவீரர்கள் பூநகரியைச் சுற்றியுள்ள கடலை முழுமையான கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். விமானப் படையின் உதவியுடன் சிங்களக் கடற்படை கடலிலே நடாத்திய மரபுவழி யுத்தத்தை எதிர்கொண்ட கடற்புலிகள் திறமையாகப் போரிட்டு, எதிரியே ஆச்சரியப்படும் அளவுக்கு சாதனை புரிந்துள்ளனர்.

கடற்கெரில்லாக்கள் என்ற நிலையிலிருந்து, தொடர்ச்சியாக நடைபெறும் கடற்சண்டைகளுக்கும் கடற்புலிகள் தயாராகிவிட்டார்கள் என்ற உண்மையை, 'தவளை' இராணுவ நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ஞானிமடம் கடற்படைத் தளம் மீதான தாக்குதலிலும் அடுத்து நடந்த மூன்று நாள் கடற்சண்டைகளின்போதும், கடற்புலிகளின் மகளிர்படைத் துணைத்தளபதி லெப்.கேணல் பாமா (கோதை) கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி உட்பட 30 கடற்புலிவீரர்கள் களப்பலியாகினர்.

'தவளை' இராணுவ நடவடிக்கையில் கடற்புலிகள் வெளிப்படுத்திய போர்த்திறன் ஒருபுறமிருக்க, இந்தத் தாக்குதலில் கடற்புலிகள் கைப்பற்றிய ஐந்து நீருந்து விசைப் படகுகளும் கடற்புலிகளின்பலத்தைப் பெருமளவு அதிகரிக்கச்செய்துவிட்டன.

இதுவரை காலமும் சாதாரண படகுகளுடன் ஆழங் குறைந்த கிளாலிக் கடல்நீரேரிப் பகுதியில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கக் கடல் தமிழன் கடலாகும்!

நீல வானத்தில் முழு நிலவு ஒளிக்கதிர்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. கடலரசியோ ஆர்ப்பரித்து தனது ஆயிரமாயிரம் அலைக்கரங்களை நீட்டி நிலவைத் தழுவ முயன்றுகொண்டிருக்கிறாள். இந்த அழகிய பின்னணியில் மட்டக்களப்பிலிருந்து யாழ். நோக்கி படகில் பயணமாகிக்கொண்டிருக்கிறோம். எனது அருகில் கவிஞர் காசி ஆனந்தன் அமர்ந்திருந்தார். ஒரு கவிஞனும் ஒரு ரசிகனும் சேர்ந்துவிட்டால், அதுவும் எழிலார்ந்த சூழ்நிலையில் சேர்ந்துவிட்டால் பேசிமகிழ்வதற்குக் கேட்கவாவேண்டும்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசினோம். இதே வங்கக் கடல் எத்தனை விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களையும் கொள்ளைகொண்டுவிட்டது என்பதை, வேதனையோடு நினைவுகூர்ந்தோம். நாங்கள் பயணம்செய்த படகின் முகப்பில் விடுதலைப் புலிகளின் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. பொங்கி எழும் அலைகளின் மீது ஏறி ஏறி இறங்கும்போது, சடசடவென புலிக்கொடி ஆடிப்பறந்த அந்தக் காட்சி, என்னை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டுபோய்விட்டது.

சோழப் பேரரசர்களான இராசராசனும், இராசேந்திரனும் ஆண்ட காலத்தில் புலிக்கொடி பறந்த கப்பல்கள் வங்கக் கடலில இப்படித்தான் சென்றிருக்க வேண்டும் எனக் கவிஞரிடம் கூறினேன் அவரும் பெருமிதத்தோடு '' ஆம் '' என ஆமோதித்தார்.

இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்று அறிஞரான கே. ஏ. நீலகண்டசாஸ்திரி அவர்கள், தான் எழுதியுள்ள சோழ வரலாறு பற்றிய நூலில் பின்வருமாறு கூறுகிறார்: '' வங்கக் கடலில் சோழர்கள் ஆதிக்கம் செலுத்தினர். உண்மையில் வங்கக்கடல் சோழர்களின் ஏரியாகத்தான் திகழ்ந்தது.''

சாஸ்திரியின் மேற்கண்ட கூற்று வெறும் புகழ்ந்துரையல்ல; வங்கக் கடலில் மட்டுமல்ல, கிழைக்கடல்கள் முழுவதிலும் சோழர்களின் ஆதிக்கம் பரவியிருந்தது. பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சீனா வரையிலும் புலிக்கொடி தாங்கிய கப்பல்கள் தங்கு தடையின்றிச் சென்று வந்தன.

ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு, புலிக்கொடி தாங்கிய கலமொன்றில் பயணம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்தது குறித்து இருவரும் மகிழ்ந்தோம்.

தம்பி பிரபாகரன் அவர்களை மறுநாள் சந்தித்தபோது, மேலே குறிப்பிட்டவற்றை அவரிடம் கூறினேன். அப்போது அவர், 'கடற்புலிகள் '' என்ற பெயரோடு தனியான கடற்படை அமைக்கப்போகும் திட்டம்பற்றிக் கூறினார்.

'' தம்பி '' யின் முகத்தில்தான் எவ்வளவு தன்னம்பிக்கை! எவ்வளவு பெருமிதம்! நினைத்ததை முடிக்கும் '' தம்பி '' யின் காலத்தில், மீண்டும் வங்கக்கடலில் தமிழர் கொடி பறக்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை,, என்பதை, அந்தக் கணத்தில் உணர்ந்தேன்.

- பழ. நெடுமாறன்

நன்றி: உலகத் தமிழர்

15. 9. 93

www.eelamview.com

www.eelamview.com



# ஒப்பரேசன் தவளை

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாகவும் உள்நாட்டிலும் அழுத்தங்களைக் கொடுத்து, புலிகளின் தலைமையைப் பணியச்செய்யும் யுக்தியை சிங்கள அரசு கடைப்பிடித்தது.

பாதை திறப்பதற்கு புலிகளைச் சம்மதிக்கச்செய்தால் அதன்பின் பொதுமக்களின் நன்மைக்கென்று கூறி அந்தப் பகுதியை அமைதிவலயமாக்கி, பெரும் இராணுவ நன்மைகளைப் பெற்றுவிடலாம் என்று சிங்கள அரசு நினைத்திருந்தது.

பூநகரியை ‘யுத்த சூன்யப் பகுதி’ என்று புலிகளின் சம்மதத்துடன் பிரகடனம் செய்தால், அங்குள்ள படையினரிலிருந்து பெரும்பாலானோரை எடுத்து அவர்களையும்பயன்படுத்திக் குடாநாடுமீது பெரும் போர் ஒன்று தொடுக்கலாம் என்றும், அதற்கு முன் துரோகக் குழுக்களை பூநகரிக்கு அழைத்து அவர்களின் துணையுடன் உளவாளிகளை உருவாக்கி, அவர்களைக்கொண்டு பெரும் நாசவேலைகளைச் செய்வித்துக் குழப்ப நிலையை உருவாக்கிவிட்டுப் போரைத் தொடுக்கலாம் என்றும் சிங்கள அரசு திட்டமிட்டது.

தமிழீழ மக்கள்மீது கரிசனை கொள்வதுபோல சின்னஞ்சிறு சலுகைகளைக் கொடுத்து, அவர்களின் பென்னம்பெரு இலட்சியங்களை விழுங்கி ஏப்பம்விடுவது, சிங்களப் பேரினவாதத்தின் வழமையான வேலை ஆனால் விழிப்புணர்வுடன் செயற்படும் புலிகளிடம் அது எடுபடாமல் போய்விடுகின்றது.

பாதைதிறப்பு விவகாரத்தில் புலிகளின் விட்டுக்கொடாப் போக்கிற்குக் காரணம், கிளாலிக்கடல்நீரேரியில் கடற்புலிகள் வைத்திருந்த அசைவியக்கசக்திதான் ( Mobility ) என்று எண்ணிய சிங்களப் படைத்துறைத் தலைமை, கிளாலியைக் கைப்பற்றுவதன்மூலம் கடற்புலிகளின் அசைவியக்கத்தை நிறுத்தி, புலிகள் இயக்கத்தைத் தனது காலடியில் வீழ்த்த முயற்சி செய்தது.

ஆனால் சிங்களப் படைகள் மேற்கொண்ட அந்த இராணுவ நடவடிக்கை (யாழ்தேவி) ‘ஆப்பிழுத்த குரங்கின் கதை போலவே’ தோல்விகண்டுவிட்டது.

சிங்கள அரசின் இராணுவ அழுத்தங்களுக்கு அடிபணிந்து அல்லது தனது இராணுவ நன்மைகளுக்காக சிங்களப் பேரினவாதம் அமைத்த இராஜதந்திர சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்கி, பாதை திறப்பிற்குப் புலிகள் இயக்கம் சம்மதித்திருந்தால், 1994 ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே, தான் வரைந்த போர்முறைத் திட்டத்தில் சிங்கள அரசு ஒரு பாரிய வெற்றியைப் பெற்றிருக்கும்; அதாவது குடாநாட்டைப் பெரும் நாசத்துக்குள்ளாக்கியிருக்கும். இதை மனதில் வைத்தபடிதான், 1994 மார்ச் மாதத்திற்கு முன் புலிகளை அழித்துவிடுவோம் என்று, பூநகரித் தாக்குதலுடன் ‘முன்னாள் லெப். ஜெனரலாகிவிட்ட’ சிசில் கூறியிருந்தார்.

ஆனால் ஆக்கிரமிப்பாளர்களின் சவால்களுக்கே சவால் விடும் தலைவரின் தனிப்பண்பும், புலிவீரர்களின் போர்த்திறனில் அவர் வைத்திருந்த பெரு நம்பிக்கையும் ஒன்றுசேர்ந்து, ‘தவளை இராணுவ நடவடிக்கை’ என்ற வடிவம் எடுத்தது. இது சிங்களப்படைத்துறை செயற்படுத்திவந்த போர்முறைத் திட்டக்தின் முதுகெலும்பையே முறித்து விட்டது.

பூநகரி கூட்டுத்தளத்தின் படைபலத்தைவைத்து ஒரு அரசியல் ரூபத்தின்மூலம் புலிகளுக்கெதிராகக் காய் நகர்த்த முயன்ற சிங்கள அரசு, இறுதியில் தோற்றுவிட்டது.

சிங்கள அரசின் சூழ்ச்சிகர அரசியல் காய்நகர்த்தலுக்கேற்றாற்போல். தலைவர் பிரபாகரன் அவர்கள் புலிகளின் தரப்பிலும் காய்களை நகர்த்தச் செய்தார். அதேவேளை கூட்டுத்தளத்தின்மீது புலிவீரர்களை நகர்த்தி, படைபலத்தைவைத்து சிங்கள அரசு செய்த அரசியல் பேரத்தைப்



‘ஒப்பரேசன் தவளை’ தாக்குதலின்போது காயமடைந்த வீரர்களை, கடல்வழியாக எடுத்துச்செல்லும் கடற்புலி வீரர்கள்.

படைபலத்தைப் பயன்படுத்தியே வெற்றிகொள்ள முயன்றார்; இறுதியில் வெற்றியும் பெற்றுவிட்டார். இந்த வெற்றி விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தையும் வழங்கிவிட்டது.

பூநகரித் தாக்குதலில் புலிகள் இயக்கம் பெற்ற வெற்றி காரணமாகவும் அங்கிருந்து அவர்கள் கைப்பற்றிச்சென்ற ஆயுத தளபாடங்களின் ஆற்றல்கள் காரணமாகவும், வட தமிழீழத்திலுள்ள சிங்களப் படைமுகாம்கள் அனைத்துமே “அடுத்த தாக்குதல் தம்மீதுதான்” என்று அரண்டபடியுள்ளன.

சிங்கள தேசத்தின் பத்திரிகைகளும் அடுத்தது முல்லைத்தீவா? மண்டைதீவா என்று ஊகித்து அஞ்சுமளவுக்கு, சிங்கள தேசத்தில் ஒரு பீதிநிலை காணப்படுகின்றது.

இந்தப் பீதிக்குக்காரணம், சிங்களப் படைகள்மீதான அவநம்பிக்கையேதான். இவ்விதம், தமது படையினர்மீதே சிங்கள மக்கள் பெரியளவில் அவநம்பிக்கைகொண்டது இதுதான் முதற்தடவை என்று கூறலாம்.

இந்த அவநம்பிக்கை நாளடைவில் இராணுவரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் பல்வேறு நெருக்கடிகளையும் குழப்பங்களையும் சிங்கள அரசுக்குக் கொடுக்கும்.

இது ஒருபுறமிருக்க, புலோப்பளைச் சமரிலும் பூநகரிப் பெருந் தாக்குதலிலும் சிங்களப் படை, சக்திவாய்ந்த T55 ரக டாங்கிகளில் நான்கை இழந்துவிட்டது அத்துடன் சில கவசவாகனங்களையும் இழந்துள்ளது சிங்களப் படையின் கவசவாகனப் பிரிவு சந்தித்த இந்தப் பேரிழப்பு, தரைப் படையின் நகர்திறனைக் கணிசமாகப் பாதித்துவிட்டது எனலாம். இதேவேளை, நாகதேவன்துறையிலிருந்து கடற்புலிகள் கைப்பற்றிய நீருந்து விசைப்படகுகள், கடற்புலிகளின் நகர்திறனை அதிகரிக்கச் செய்துள்ளன.

இவ்விதம் பூநகரிப் பெருந் தாக்குதலுடன் சிங்களப் படைகள், தரையிலும் கடலிலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன.

இந்த இராணுவ நெருக்கடிகளுக்கு சிங்கள அரசு எப்படி முகங்கொடுக்கப்போகிறது?

இந்த உண்மை நிலையைப் புரிந்துகொண்டு புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதற்காக, எமது இளம் பரம்பரை எவ்வாறு செயற்படப் போகின்றது என்பவற்றில்தான், அடுத்த திருப்புமுனை தங்கியுள்ளது. ○

## சமர்க் களங்களில்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

‘ஆகக்குறைந்ததூர உள்வாங்கும் சக்திகொண்ட’ – கமராக்களுடன்தான் களத்தில் இறங்குகின்றார்கள் ஆனால் வெளிநாடுகளில், அதி சக்திவாய்ந்த நவீன தொழில்நுட்பத் திறனுடன் உருவாக்கப்பட்ட - ‘மிகக் கூடியதூர உள்வாங்கும் சக்திகொண்ட’– படப்பிடிப்புக் கருவிகளுடன் சண்டையின் உச்சமுனைக்குப் பின்னே நின்றுதான், போர் அரங்கைப் படம் பிடிப்பார்கள். ஆனால், உயிர் ஊசலாடும் அபாயகரமான சூழ்நிலையில் நின்று எம்மவர்கள் பணியாற்றுகின்றார்கள்.

இவர்கள் எடுக்கும் படங்கள் எல்லாம், கிடைக்கக்கூடியவசதிகளுடன், இயலுமான அளவுக்கு நல்லமுறையில் பேணப்பட்டு வருகின்றன. வருங்கால சந்ததிகளுக்கு, இன்றைய கால போராட்டத்தின் கனபரிமாணத்தையும் பெற்றெடுக்கும் விடுதலையின் பெறுமதியையும் அவை உணர்த்தும்.

குண்டுமழையில் குளித்து, வெடிமருந்துப் புகையைச் சுவாசித்து, சாவு விளையாடும் சண்டைமுனைகளிலிருந்து எம் போராளிகள் எடுத்துத்தந்த படங்கள் ,காலநதியில் கரைந்து போகாதவை; எக்காலத்திலும் உயிர்த்துடிப்போடு விளங்கப் போகின்றவை. வீடியோ நாடாக்களாகவும் புகைப்படச் சுருள்களாகவும் உள்ள அவை தலைசிறந்த ‘யுத்த ஆவணங்களா’கப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன.

இன்றைய காலத்தில் எங்கள் தாயக மண்ணில் நிகழும் வீர சுதந்திரப் போராட்டத்தை – எங்கள் வீரர்கள் படைக்கும் தீர சாதனைகளை – வேறெங்குமே காணமுடியாத அதி உன்னத அர்ப்பணிப்புகளையெல்லாம் – கமராக்களிற்குள் குவியச் செய்து, எமது போராளிகள் படங்களாக உருக்கொடுக்கின்றார்கள். இவை இக்காலத்திலும் – எக்காலத்திலும் எங்கள் பெருமைகளை உரத்துச் சொல்லும்! ○

## ஒப்பரேசன்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*மேலாதிக்கம் செலுத்திய கடற்புலிகள். இனி நீருந்து விசைப்படகுகளுடன் கிளாலி நீரேரியை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் அதேவேளை, பெருங்கடலிலும் சிங்களக் கடற்படைக்கு பெரிய சவாலாக அமைவார்கள் என்று நம்பலாம்.*

*தனித்த நிலையில் இருந்தாலும் கடற்கரையோரம் அமைக்கப்பட்ட இராணுவத் தளங்கள் பாதுகாப்பானவை என்றே, இதுவரைகாலமும் படைத்துறைத் தலைமை எண்ணியிருந்தது. ‘தவளை’ இராணுவ நடவடிக்கையுடன் அந்த எண்ணம் தகர்ந்துவிட்டது. மன்னார் மாவட்டத்திலிருந்த சிலாவத்துறை முகாம் அண்மையில் அகற்றப்பட்டமை, இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.*

*‘தவளை’ இராணுவ நடவடிக்கையின் இராணுவப் பரிமாணத்தையும், நாகதேவன்துறையில் கடற்புலிகள் கைப்பற்றிய நீருந்துவிசைப் படகுகளையும் அவற்றின் சக்தியையும் எடைபோடும் ஒரு இராணுவ வல்லுனன், “குடாநாடு மீதான இராணுவ முற்றுகை என்பது இனிமேல் சாத்தியமற்றதொன்று” என்ற முடிவுக்கே வருவான்*

*இது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு வளர்ச்சிக்கட்டத்தை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டுகின்றது.* ○

www.eelamview.com